ௐ

விவிய விஜூா

VIVIDHA VIDYA



௰

विविध विद्या

# விவித வித்யா

## மூன்றாவது ஆண்டு மலர்

பார்த்திப ஆடி - மார்கழி July - December 2005

50/=



ஸ்தாபக ஆசிரியர்:

சுரபாரதி சேவா துரந்தரர்
வித்வ சிரோமணி, வித்யா கலாபமணி,
சிவகலா பூஷணம், சம்ஸ்கிருத பண்டிதர்,
**பிரம்மஸ்ரீ ச. பஞ்சாக்ஷர சர்மா**

மலர் 4

எழுந்திரு! விழித்திரு!
கோரியகருமம் நிறைவேறும்வரை
உழைத்திரு!



இதழ் 1,2

நிர்வாக ஆசிரியர்
பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.(Hons.)
(கோப்பாய் சிவம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர்காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபேறதனால்
எற்றைக்கும் திருவரு ளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.

- பெரிய புராணம்

**प्रियवादी प्रियकारी विमृश्यकारी विशो जयति ।**
**बहुमित्रः सुखवासी धर्मरतः स परां श्रियं लभते ॥**

𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌦𑍀 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑌾𑌰𑍀 𑌵𑌿𑌮𑍃𑌶𑍍𑌯𑌕𑌾𑌰𑍀
𑌵𑌿𑌶𑍋 𑌜𑌯𑌤𑌿
𑌬𑌹𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑌃 𑌸𑍁𑌖𑌵𑌾𑌸𑍀 𑌧𑌰𑍍𑌮𑌰𑌤𑌃
𑌸 𑌪𑌰𑌾𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 𑌲𑌭𑌤𑍇॥

இனிது பேசுபவன், இனியதைச் செய்பவன், சிந்தித்துச் செயல்படுபவன், மக்களிடம் நன்மதிப்புப் பெறுபவன், நிறைய நண்பர்களைக் கொண்டவன், தர்ம வழியில் செல்பவன் சுகமாக வசிப்பான். பெருஞ்செல்வம் பெறுவான்.

**அலைகடலுக்கு அப்பாலிருந்து ஆண்டுமலருக்கு ஒரு வாழ்த்து**

विद्या प्रधान विवेकदाय वीणापुर विप्र विषयवर्धनाय।
विविध विद्या नाम विषयवर्धिनी विजयतां विद्या कटाक्षणेन।।

**சம்ஸ்கிருத பண்டிதர், சிக்ஷாநிபுண சிவஸ்ரீ கி. சதாசிவக் குருக்கள்**
**கோலாலம்பூர், மலேசியா.**

## இன்று புதிதாய்ப் பிறந்தோம்.

**பழமையில் காலூன்றிநின்று புதுமைகளை வரவேற்போம்.**
**வேற்றுமைகளிலிருந்து ஒற்றுமையை நாடுவோம்.**
**முரண்பாடுகளை முன்வைத்து ஒருமைப்பாடு காண்போம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுடன்.....

அன்பு நெஞ்சங்களே, அன்பு வணக்கங்கள்.

உங்கள் விவிதவித்யா ஆசிரியரின் மருத்துவ சிகிச்சை ஒன்று காரணமாகவும் நாட்டில் நிலவிய அசாதாராணமான காலநிலை மற்றும் இடையிடையே தோன்றிய சில பதற்றமான அரசியல் சூழ்நிலை இவற்றினாலும் நாம் நினைத்தபடி ஆண்டுவிழாவையும் இந்துப் பண்பாட்டுக் கண்காட்சியையும் 2005 ஒக்டோபரில் நடத்தமுடியாமல் போனதுடன் இந்த இதழும் தாமதமாக இரு இதழ்கள் இணைந்த நிலையில் (ஆனால், அதிக பக்கங்களுடன் ஆண்டுமலராக) வெளிவருகின்றது. பெருமனத்துடன் பொறுத்துக் கொள்ளுங்கள். அடுத்த இதழ் வெளியீட்டுடன் அந்த விழாக்களை நடத்தமுடியும் என நம்புகிறோம். "தை பிறந்தால் வழி பிறக்குமல்லவா?"

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல அன்பு உள்ளங்களின் ஆதரவு பெருகிவருகிறது. ஐரோப்பிய நாடுகளில் விவிதவித்யா மற்றும் சர்வானந்தமய பீடத்தின் சம்ஸ்கிருத, தமிழ் வெளியீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இப்போது செய்யப்பட்டிருப்பதால் பல அன்பர்கள் பயனடைகின்றனர். எமது பிரதிநிதிகளான பிரம்மஸ்ரீ ச. சிவசேகர சர்மா (ஜெர்மனி) பிரம்மஸ்ரீ இ. வேதரூபக் குருக்கள் (லண்டன்) ஆகியோரின் முகவரிகள் பின் அட்டையில் உள்ளன. அவர்களால் சேர்க்கப்பட்ட புதிய சந்தாதாரர்களின் பெயர்விபரங்கள் அடுத்த இதழில் பிரசுரமாகும்.

சரி. பழைய, புதிய விஷயங்களுடன் பெருவிருந்தாக வரும் இம்மலரை இனிச் சுவையுங்கள்.

....நாங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி நிறுவனங்களும் சமய ஸ்தாபனங்களும் தேவஸ்தானங்களும் சிவாச்சாரியார்களும் இச்சஞ்சிகைக்குப் பேராதரவு தந்துதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## புதினம்



ஆலயங்கள், சமய ஸ்தாபனங்கள், கல்வி நிறுவனங்கள், சமயப் பெரியோர்கள், அந்தண சிவாச்சாரியார்கள் பற்றிய செய்திக் குறிப்புக்களைச் சுருக்கமாக எழுதி அனுப்பினால் பிரசுரிக்கப்படும்.

## ஆன்மீக ஜோதி அருள் ஜோதியில் கலந்தது



ஈழத்தின் இந்துப் பாரம்பரிய மரபில் அடியார்களின் உள்ளம் கவர்ந்த ஆன்மீகப் பேரறிஞர் வரிசையில் திகழ்ந்தவர் அளவெட்டி, அருட்கவி, சீ. வினாசித்தம்பி அவர்கள். அவர் ஆசிரியராக, சமயப்பிரசாரகராக, ஜோதிட அறிஞராக, கவிஞராக, எழுத்தாளராக, ஆதீனகர்த்தராக, ஆன்மீக வழகாட்டியாக, ஆலோசகராக, குருவாக இவ்வாறு பல்வேறு பரிமாணங்களில் பிரகாசித்த அருள்ஜோதி கடந்த 11-12-2005 இல் தெய்வீக சமாதி அடைந்த துயரச்செய்தியை விவித வித்யா வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதுடன் அவரது ஆத்மாவுக்கு நமது அஞ்ஜலிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**உங்கள் சந்தாக்களை உடனே அனுப்பி உங்கள் இதழ்களை உறுதிப்படுத்துவதுடன் விவிதவித்யாவின் வளர்ச்சிக்கும் உதவுங்கள்.**

**ஆண்டுச் சந்தா ( 4 இதழ்கள் )ரூ. 100.00**

**ஆயுள் சந்தா ரூ. 1000.00**

முகவரி
ப.சிவானந்தசர்மா
"விவிதவித்யா"
கந்தசாமிகோயில் அருகில்,
இணுவில், சுன்னாகம்,
ஸ்ரீலங்கா.

☎ 021-222-6004
e-mail:
vividhavidya@hotmail.com
vividhavidya@yahoo.com
Web site: www.geocity/sarvanandamayapedam.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் பண்டிதர் ச.ப.சர்மா தொகுத்து வழங்கும்



**தேர்ந்தெடுத்த சுவையான**
**நீதி சுலோகங்களின்**
**தொகுப்பு(உரையுடன்)**

# நீதி மணிமாலா

முதற்பகுதி - பாதிச் சுலோகங்கள்

1. சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு: ணிஷ்ணோஸ்ச ஹ்ருதயம் சிவ:।

ஹ்ருதயம் என்ற சொல்லிற்குப் பதிலாக ஹ்ருதயே என்ற பாடபேதமும் உண்டு.

𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌶𑍍𑌚 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌶𑌿𑌵𑌃॥

शिवस्य हृदयं विष्णुः विष्णोश्च हृदयं शिवः।।

சிவனது இதயத்தில் விஷ்ணுவும் விஷ்ணுவின் இதயத்தில் சிவனும் இருக்கின்றனர்.

சிவன், விஷ்ணு பேதமின்றி இறைவனை வழிபட வேண்டுமென்பதை விளக்குவது.

2. அரச்சகஸ்ய ப்ரபாவேன சிலா பவதி சங்கர:।

𑌅𑌰𑍍𑌚𑌕𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑍇𑌨 𑌶𑌿𑌲𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌶𑌂𑌕𑌰𑌃॥

अर्चकस्य प्रभावेन शिला भवति शंकरः।।

அர்ச்சகரின் மகிமையால் கல் சிவனாக ஆகிறது.

அர்ச்சகரின் மந்த்ர சக்தி, மநோபலம் முதலானவற்றை இது தெரிவிக்கிறது.

3. யோ யத்ர குசல: கார்யே தத்ர தம் விநியோஜயேத்।

𑌯𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌕𑍁𑌶𑌲𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌂 𑌵𑌿𑌨𑌿𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍॥

यो यत्र कुशलः कार्ये तत्र तं विनियोजयेत्।।

எவன் எக்காரியத்தில் வல்லவனோ அவனை அக் காரியத்தில் இணைக்கவேண்டும்.

ஒப்பிடுக: எதனை எதனால் எவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் - திருக்குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 𑌨𑌿𑌤𑍍𑌯 𑌪𑌾𑌰𑌾𑌯𑌣 𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌾𑌣𑌿

## காலையில் எழுந்திருக்கும்போது
## படுக்கையில் இருந்தவாறே சொல்லவேண்டியவை.

எமது உள்ளங்கைகள் புனிதமானவை. அதிகாலையில் கண்விழித்தவுடன் விழிவிசேஷமாக (முழிவியளம்) அவற்றைப் பார்த்துக்கொண்டு இதனைச் சொல்லவேண்டும்.

𑌕𑌰𑌾𑌗𑍍𑌰𑍇 𑌵𑌸𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀 𑌕𑌰𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀।
𑌕𑌰𑌮𑍂𑌲𑍇 𑌤𑍁 𑌗𑍌𑌰𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑍇 𑌕𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍॥

கராக்ரே வசதே லக்ஷ்மீ கரமத்யே சரஸ்வதீ
கரமூலே து கௌரீ ஸ்யாத் ப்ரபாதே கர தர்சனம்

(உள்ளங்கை நுனியிலே லக்ஷ்மியும் நடுவிலே சரஸ்வதியும் அடியிலே கௌரியும் வசிக்கின்றனர். அதனால் அதிகாலையில் உள்ளங்கைகளைத் தரிசிக்கிறேன்.)

கைகூப்பி வணங்கியவாறு இவற்றைச் சொல்லவேண்டும்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌮𑍁𑌰𑌾𑌰𑌿𑌃 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌶𑍍𑌚
𑌭𑌾𑌨𑍁𑌃 𑌶𑌶𑍀 𑌭𑍂𑌮𑌿𑌸𑍁𑌤𑍋 𑌬𑍁𑌧𑌶𑍍𑌚
𑌗𑍁𑌰𑍁𑌶𑍍𑌚 𑌶𑍁𑌕𑍍𑌰𑌃 𑌶𑌨𑌿 𑌰𑌾𑌹𑍁 𑌕𑍇𑌤𑌵𑌃
𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌮𑌮 𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑌮𑍍॥

ப்ரம்மா முராரி த்ரிபுராந்தகஸ்ச பாநுஸ் ஸசீ பூமிசுதோபுதஸ்ச
குருஸ்ச சுக்ரஸ்ச சனி ராகு கேதவஹ குர்வந்து ஸர்வே மம சுப்ரபாதம்

(பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் நவக்கிரகங்களும் எனது இன்றைய நாளை நல்ல காலையுடன் புலரச் செய்வார்களாக.)

𑌅𑌹𑌲𑍍𑌯𑌾 𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍀 𑌸𑍀𑌤𑌾 𑌤𑌾𑌰𑌾 𑌮𑌨𑍍𑌦𑍋𑌦𑌰𑍀 𑌤𑌥𑌾।
𑌪𑌞𑍍𑌚𑌕𑌨𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌮𑌰𑍇𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕 𑌨𑌾𑌶𑌨𑌮𑍍॥

அஹல்யா த்ரௌபதீ ஸீதா தாரா மந்தோதரீ ததா
பஞ்சகன்யா: ஸ்மரேன் நித்யம் மஹாபாதக நாசனம்

(அகலிகை, திரௌபதி, சீதா, தாரா, மண்டோதரீ ஆகிய ஐந்து கன்னிகைகளையும், நாம் செய்த பாபங்கள் அகலுவதற்காக நினைத்துக்கொள்ளவேண்டும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

𑌅𑌯𑍋𑌧𑍍𑌯𑌾 𑌮𑌥𑍁𑌰𑌾 𑌮𑌾𑌯𑌾 𑌕𑌾𑌶𑍀 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀 𑌅𑌵𑌨𑍍𑌤𑌿𑌕𑌾।
𑌪𑍁𑌰𑍀 𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌵𑌤𑍀 𑌚𑍈𑌵 𑌸𑌪𑍍𑌤𑍈𑌤𑌾 𑌮𑍋𑌕𑍍𑌷𑌦𑌾𑌯𑌿𑌕𑌾𑌃॥

அயோத்யா மதுரா மாயா காசீ காஞ்சீ அவந்திகா
புரீ த்வாராவதீ சைவ ஸப்தைதா மோக்ஷ தாயிகா:

(அயோத்தி, மதுரை, மாயா, காசி, காஞ்சி,அவந்திகா, துவாராவதி ஆகிய ஏழு நகரங்களும் மோக்ஷம் தருபவை ஆதலால் அவற்றையும் நினைத்துக்கொள்ளவேண்டும்.)

𑌅𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌾𑌮𑍋 𑌬𑌲𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌹𑌨𑍂𑌮𑌾𑌂𑌶𑍍𑌚 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌃।
𑌕𑍃𑌪𑌃 𑌪𑌰𑌶𑍁𑌰𑌾𑌮𑌶𑍍𑌚 𑌸𑌪𑍍𑌤𑍈𑌤𑍇 𑌚𑌿𑌰𑌜𑍀𑌵𑌿𑌨𑌃॥

𑌸𑌪𑍍𑌤𑍈𑌤𑌾𑌨𑍍 𑌸𑌂𑌸𑍍𑌮𑌰𑍇𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌮𑌾𑌰𑍍𑌕𑌣𑍍𑌡𑍇𑌯𑌮𑌥𑌾𑌷𑍍𑌟𑌮𑌂।
𑌜𑍀𑌵𑍇𑌦𑍍𑌵𑌰𑍍𑌷 𑌶𑌤𑌂 𑌸𑌾𑌗𑍍𑌰𑌂 𑌅𑌪𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃॥

அஸ்வத்தாமோ பலிர்வ்யாச: ஹநுமாம்ஸ்ச விபீஷண:
க்ருப: பரசுராமஸ்ச ஸர்தைதே சிரஜீவின:
ஸப்தைதான் ஸம்ஸ்மரேன் நித்யம் மார்க்கண்டேயமதாஷ்டமம்
ஜீவேத் வர்ஷ ஸதம் ஸாக்ரம் அபம்ருத்யு விவரிஜித:

(அசுவத்தாமா, பலி, வியாசர், ஹநுமார், விபீஷணர், கிருபர், பரசுராமர்,ஆகிய சப்த சிரஞ்ஜீவிகளையும் எட்டாவதாக மார்க்கண்டேயரையும் துர்மரணமில்லாமல் நூறாண்டு வாழ்வதற்காக நினைக்கவேண்டும்.)

**படுக்கையிலிருந்து எழுந்து பூமியில் கால்வைத்து எழும்போது கால்மிதிக்கும் குற்றத்தை மன்னிக்குமாறு பூமாதேவியை வேண்டுதல்.**

𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌵𑌸𑌨𑍇 𑌦𑍇𑌵𑌿 𑌪𑌰𑍍𑌵𑌤𑌸𑍍𑌤𑌨𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑍇।
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌤𑍍𑌨𑍀 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌪𑌾𑌦𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌂 𑌕𑍍𑌷𑌮𑌸𑍍𑌵 𑌮𑍇॥

சமுத்ர வசனே தேவி பர்வதஸ்தனமண்டிதே
விஷ்ணுபத்னீ நமஸ்துப்யம் பாதஸ்பர்ஸம் க்ஷமஸ்வ மே

(சமுத்திரத்தை ஆடையாகவும் மலைகளை முலைகளாகவும் கொண்ட விஷ்ணுபத்தினியே உனக்கு வணக்கம். எனது பாதங்களினால் மிதிக்கப்படுவதை மன்னிப்பாயாக.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டத்தக்க முயற்சி

# சாயி சமிதியின் ஏற்பாட்டில்..........

# ..................நாடெங்கும் ஹோமம்

கடந்த ஒக்டோபர் மாதத்தில் நாட்டின் பல பாகங்களில் சாயி சமிதியினரின் ஏற்பாட்டில் நவக்கிரக ஹோமம், மிருத்யுஞ்ஜய சாந்தி முதலிய வழிபாடுகளும் கூட்டுப்பிரார்த்தனைகளும் நடைபெற்றன. நாட்டில் சாந்தி, சமாதானம் நிலைப்பதற்காகவும் சகல மக்களும் சுபிட்சம் மிக்க நல்வாழ்வு வாழவும் வேண்டுமென்பதே இவ் வழிபாடுகளின் நோக்கமாகும்.

ஒரே நேரத்தில் பல இடங்களில் பலர் கூடி ஒருமித்த சிந்தனையுடன் வழிபாடுசெய்யும்போது அதற்குப் பலன் உண்டு என்பதை நம் முன்னோர்கள் அனுபவபூர்வமாகக் கண்டறிந் திருக்கிறார்கள்.

ஆன்மீகவாதிகளின் நம்பிக்கை மிக்க இச் செயற்பாட்டிற்கு விஞ்ஞான ரீதியாகவும் நேர்முகமான விளக்கங்களை மேலைத்தேயத்தவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். மனோசக்தியின் வலிமையும் அற்புதமான அதன் செற்பாடுகளையும் நமது யோகிகளும் ரிஷிகளும் கண்டறிந்து நமக்கு வழங்கியுள்ளனர். இன்று நவீன அறிவியலும் அதனை நிருபிக்கின்றது.

நாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரணமான சூழ்நிலை, அமைதியற்ற வாழ்க்கைமுறை, இயல்புநிலை தவறிய இயற்கையின் போக்கு என்பன ஏற்படுத்தியிருக்கும் மனநிம்மதியற்ற இன்றைய நிலையில் இது ஒரு சிறந்த முன்னுதாரணமாகும்.

இன்றைய இளைஞர்களின் பொறுப்பற்ற போக்குகள் பற்றியும் ஆன்மீக ஈடுபாடின்றி அவர்கள் தீய வழிகளில் செல்கின்றனர் என விமர்சிக்கப்படும் இக்காலத்தில் இளைஞர்கள் பலர் இந்த மஹாயாகங்களில் ஆர்வத்துடன் பங்குபற்றிக் கூட்டுப் பிரார்த்தனைகளிலும் கலந்துகொண்டமை மகிழ்ச்சிக்குரியதாக இருந்தது.

ஹோமங்களின் மகிமைபற்றி ஏற்கெனவே விவிதவித்யாவில் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அக்கினியிலே இடப்படுகின்ற பொருட்கள் ஆன்மீக ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் பல நன்மைகளைத் தருவதாகும். எனவே எல்லாவகையிலும் சாயி சமிதியினரின் இந்த முயற்சி போற்றத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுடன் ....

.........விவித வித்யா காலம் தாழ்த்திக் கிடைத்தாலும் தரமான கட்டுரைகளை வாசிக்க சந்தர்ப்பம் கிடைக்கின்றது. ஆத்ம பலம் கட்டுரை மிக அருமையாக உள்ளது. காலத்திற்கேற்ற கருத்துக்கள், உளவியலோடு ஒட்டிய தகவல்கள் நன்றாக இருக்கின்றன. ஐயம் தெளி அரங்கில் தெளிவுறுத்தப்படும் விடயங்கள் தரமானவையாகவும் உள்ளன. இவ்வரங்கை நடத்துவது உலகமயமாக்கப்பட்ட தற்காலத்தில் இளைஞர்களைச் சமயப்பற்றுள்ள சரியான வழியில் நடத்த உதவும் ஒரு முயற்சியாகும். எமது வடமொழி அறிவை மேலும் விருத்தி செய்யவும் காப்பாற்றிக்கொள்ளவும் வழிசமைத்துக் கொடுத்துள்ளீர்கள். வாழ்க! வளர்க உங்கள் பணி.

**திருமதி ஜயந்தி திஸாநாயக்கா** B.A. B.F.A.
**கிழக்குப் பல்கலைக் கழகம்.**

............தாங்கள் செய்யும் பணிகள் போற்றத்தக்கவை. முதுபெரும் அந்தண சிவாசாரியார்கள் உட்பட இளைய தலைமுறை சிவாசாரியார்களுக்கும் பயன்படுவது மகிழ்ச்சி தரும் விடயமாகும். விவித வித்யா பழைய பிரதிகளையும் ெற்றுக் கொள்ள முடியுமா?

**சிவஸ்ரீ பொ. லட்சநாமதாசக் குருக்கள்**
**மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.**

விவிதவித்யா கிடைத்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.மிகவும் அரிய முயற்சி. மேன்மேலும் வளர்ச்சிபெறப் பிரார்த்திக்கிறேன்.

வேதசிவாகம அறிவுப்போட்டி மிகவும் பயனுள்ளதொன்றாகும். ஆயினும் அது பெரியவர்களுக்காக இல்லாமல் வித்தியார்த்திகளுக்காக இருப்பதே அழகு. ஒரு வயது வரம்பை ஏற்படுத்தி அதில் இளைஞர்களை மட்டும் பங்குபற்றச்செய்வது அவர்களுக்கு உற்சாகமளிக்கும் என நினைக்கிறேன்.................

**பிரம்மஸ்ரீ து. குருசாமி ஐயர்**
**75, எல்லை வீதி, மட்டக்களப்பு.**

.... நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவித வித்யாவை வளர்க்கும் வித்யார்த்திகள்

நாம் வேண்டிக்கொண்டதற்கிணங்க அநேக அன்பர்கள் விவிதவித்யாவின் தொடர்ச்சியான வெளியீட்டிற்கு உதவும்வண்ணம் நிதியுதவிகளை வழங்கிவருகிறார்கள். வெளிநாடுகளிலும் விவிதவித்யாவைப் பலர் ஆவலுடன் வரவேற்கின்றனர்.

**ஆண்டுச் சந்தா ரூபா 100.00** (நான்கு இதழ்களிற்கு) என்பதற்கிணங்க, ஓராண்டுச் சந்தா முதல் ஐந்தாண்டுச் சந்தா வரை வழங்கியுள்ளனர் சிலர்.

**ஆயுள் சந்தா ரூபா 1000.00** வழங்கியுள்ளனர் சிலர்.

அதற்குமேல் **அன்பளிப்பு** என்றவகையில் அதிக நிதியை வழங்கியுள்ளனர் இன்னும் சிலர்.

இம் மூவகையிலும் ஆதரவு வழங்கியவர்களின் பட்டியல் சென்ற மூன்று இதழ்களில் தரப்பட்டது. அவ்விதழ்களில் தவறவிடப்பட்ட சில பெயர்களும் புதிதாக ஆதரவுக் கரம் நீட்டியவர்களின் பெயர்களும் இங்கு தொடர்கின்றன.

## ஆயுள் சந்தா அளிக்கும் ஆதரவாளர்கள்

75. சிவஸ்ரீ ச. சண்முகநாதக் குருக்கள், மயிலணி, சுன்னாகம்.
76. சிவஸ்ரீ தி.செல்வராழக்குருக்கள், (வரணி) மயூரேசன் கட்டடம், 15/4, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
77. பிரம்மஸ்ரீ சி. இரவீந்திர சர்மா, சிவன்கோவில் முன்பாக, நல்லூர்.
78. பிரம்மஸ்ரீ சந்திராஸ்ரீ. ஸ்ரீஜெயபவ சர்மா, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
79. சிவஸ்ரீ ப. சுப்பிரமணியக் குருக்கள் (மோகன்), மாணிக்கப்பிள்ளையார் கோவில், ஹற்றன்
80. பிரம்மஸ்ரீ ச. ஈஸ்வர சர்மா, புதிய செம்மணி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
81. சிவஸ்ரீ ராஜகாந்த. பத்மநாதக் குருக்கள், 71, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை.
82. சிவஸ்ரீ வை. பாலசுந்தரக்குருக்கள், (பாலா) சிவன் கோவில், கொச்சிக்கடை, கொழும்பு.
83. சிவஸ்ரீ இராம. ஜெயசங்கரக் குருக்கள், (கண்ணன்) சிவன் கோவில், கொச்சிக்கடை, கொழும்பு
84. சிவஸ்ரீ ப. முத்துக்குமாரசாமிக்குருக்கள், உத்தரகோவை.
85. சிவஸ்ரீ சா. சோமதேவக் குருக்கள், அரசகேசரிப் பிள்ளையார் கோவில், நீர்வேலி.
86. சிவஸ்ரீ ச. ஹரிஹரசுதக் குருக்கள், தர்மகர்தா, ஐயப்பன் கோவில், கோண்டாவில்.
87. பிரம்மஸ்ரீ கு. மங்களேஸ்வர சர்மா, நல்லூர்.
88. சிவஸ்ரீ ம. பரமேஸ்வரக் குருக்கள் தர்மகர்த்தா, துர்க்கையம்மன் கோவில், சாவகச்சேரி.
89. பிரம்மஸ்ரீ பா. கோபாலகிருஷ்ண சர்மா, ஜெர்மனி.
90. பிரம்மஸ்ரீ ச. கந்தராஜேஸ்வர சர்மா, வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில், கோப்பாய்.
91. சிவஸ்ரீ தி. கங்காதரக் குருக்கள், ஈவினை, புன்னாலைக்கட்டுவன்.
92. பிரம்மஸ்ரீ வ. சிவகுமார சர்மா, கோண்டாவில்.
93. நியந்த்ரீ, சிவன்கோவில், நல்லூர்.
94. பிரம்மஸ்ரீ எம். ஐ. பாலசண்முகன் எல்.எல். பி. 12/3,1/1, Arthurs place, Dehiwala.
95. பிரம்மஸ்ரீ ச.சாந்தரூப சர்மா, கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. பிரம்மஸ்ரீ பொ. வெங்கடேஸ்வர சர்மா, 1ம் வட்டாரம், அனலைதீவு.
97. பிரம்மஸ்ரீ நா. பிரபாகர சர்மா, முத்துமாரி அம்மன் கோவில் ரோட்டு, வவுனியா.

## ஆண்டுச் சந்தா அளிக்கும் அன்பர்கள்

103. சிவஸ்ரீ ந. தாமோதரக் குருக்கள், நீராவியடி, யாழ்ப்பாணம்.
104. சிவஸ்ரீ B.B. குருக்கள் (சுந்தரம்) தென்னாபிரிக்கா.
105. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் (கண்ணன்) ஆனைக்கோட்டை
106. பிரம்மஸ்ரீ வ. ஸ்ரீகாந்த சர்மா, கோண்டாவில்.
107. சிவ, மறவன்புலோ
108. பிரம்மஸ்ரீ த. சற்குண சர்மா, ஊரெழு மேற்கு, சுன்னாகம்.
109. பிரம்மஸ்ரீ சிகிவாகன சர்மா, தெஹிவளை.
110. சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்கள், ஊரெழு மேற்கு, சுன்னாகம்.
111. சித்தாந்தபானு, சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள், கோப்பாய்.
112. பிரம்மஸ்ரீ து. குருசாமி ஐயர், 75, எல்லை வீதி, மட்டக்களப்பு.

## கால அளவை

| | |
|---|---|
| 15 நிமிஷம் | 1 காஷ்டை |
| 30 காஷ்டை | 1 கலை |
| 30 கலை | 1 முகூர்த்தம் – (௨ நாழிகை) |
| 30 முகூர்த்தம் | 1 நாள் |
| 15 நாள் | 1 ப'ம் |
| ௨ ப'ம் | 1 மாதம் |
| 6 மாதம் | 1 அயனம் |
| ௨ அயனம் | 1 வருடம் – (ஒருதேவநாள்) |
| 360 மநுவருஷம் | 1 தேவவருஷம் |
| பன்னீராயிரம் தேவவருஷம் – | 1 சதுர்யுகம் |

| | | |
|---|---|---|
| கிருதயுகம் | – 17,௨8,000 மநுவருஷம் | – 4,700 தேவவருஷம் |
| திரேதாயுகம் | – 1௨,96,000 மநுவருஷம் | – 3,600 தேவவருஷம் |
| துவாபரயுகம் | – 8,64,000 மநுவருஷம் | – ௨,400 தேவவருஷம் |
| கலியுகம் | – 4,3௨,000 மநுவருஷம் | – 1,௨00 தேவவருஷம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்ததும் தெரியாததும்

- சோம. வரதராஜசர்மா
கொழும்புத்துறை

**கோத்ரம் - ப்ரவரம்**

துவிஜர்கள் ஆகிய நாம் அனைவரும் ப்ரம்மாவிடமிருந்து உண்டான மகரிஷிகளின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். இதற்கு உதாரணமாக உபநயனமானவர்கள் பெரியவர்களை வணங்கும் போது அபிவாதயே என்று சொல்லி எமது கோத்ரம் – ப்ரவர ரிஷிகள் – சூத்ரம் முதலியவைகளைக் கூறி பெரியோரின் ஆசியைப் பெறுகிறோம்.

கோத்ரம் என்பது ஒரு சம்ஸ்கிருதப் பதம். அதாவது சந்ததி குலம், பரம்பரை, என்பது கருத்து. எனினும் வம்சத்தையே கோத்ரம் என்று ஆபஸ்தம்பர் முதலிய மஹரிஷிகள் கூறியிருக்கின்றார்கள். உதாரணமாக, கௌண்டிய கோத்ரம் என்றால் அந்த மஹரிஷியினுடைய வம்சத்தைச் சேர்ந்தவர் என்பது அதன் கருத்து. இதேபோல் மற்றைய கோத்திரங்களும் அந்தந்த மகரிஷியினுடைய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெளிவு

இந்த மகரிஷிகள் ப்ரம்மாவின் நான்கு புத்திரர்களாவர். ப்ருகு, அங்கிரஸ், மரீசி, அத்ரி ஆகியோரே இந்த நால்வரும்

1. ப்ருகுவிடம் இருந்து ஜமதக்கினியும்
2. அங்கிரஸிடம் இருந்து கௌதமரும், பாரத்துவாஜரும்
3. மரீசியிடம் இருந்து கஸ்யபர், வசிஷ்டர், அகஸ்த்யரும்
4. அத்திரியிடமிருந்து விஸ்வாமித்திரரும் உண்டாயினர்.

நாம் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் மேற்கூறிய ரிஷிகளில் ஒருவராவது எம்முடைய ப்ரவரத்தில் வரும். இதனால்தான் கோத்ர ரிஷி என்பது வழங்கலாயிற்று. ஆதிகாலத்தில் மந்திரங்களைக் கண்டுபிடித்து அதை முறைப்படி வகுத்துத் தந்த மஹநீயர்களைத்தான் ப்ரவர ரிஷிகள் எனக் கூறுகின்றோம்.

யஜ்ஞாதி – ஹோம கர்மாக்கள் செய்யும் போது ப்ரவரம் சொல்லி அக்னியைப் பிரார்த்திக்க வேண்டும். அப்போது நாம் இந்த ரிஷியின் வம்சத்தில் தோன்றியவர் என்று கூறினால்தான் தேவரும் ரிஷிகளும் சந்தோஷம் அடைவார்கள். அத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோமகர்மா செய்யும்போது ஹோதாவும் அத்வர்யுவும் ப்ரசன்னமாயிருக்கிறார்கள். அவர்கள் அக்னியைப் பார்த்து இந்த ரிஷியின் வம்சத்தில் தோன்றியவர் யஜ்ஞம் செய்கிறார். அவர் நலமாக இருக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறார்கள். தற்போது இதை அநுசரித்துத்தான் நான் இன்னாரின் பிள்ளை – பேரன் என்று சொல்லிப் பெருமைப்படுகிறோம்.

அக்னிக்குச் சமமாக உள்ள பெரியோர்களை ப்ரவரம் கூறி வணங்குகிறோம். அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக நாம் செய்யும் நமஸ்காரத்திற்குத்தான் அபிவாதனம் என்று பெயர். பெரியோர்களின் பாதங்களைத் தொட்டு நமது இருகாதுகளையும் தொடவேண்டும். பாதங்களைத் தொடும்போது கைகளை மாற்றி (X தரபோல்) வலதுகையால் அவரது வலது பாதத்தையும், இடது கையால் அவரது இடது பாதத்தையும் தொட்டு ஆசிபெறவேண்டும்.

விவாஹசமயத்திலும் வது – வரன் இவர்களின் கோத்ரம் ப்ரவரம் முதலியவற்றைக் கூறி புதுமணத்தம்பதிகளின் பிதாவின் பிதாமகன் – பிதாமகன் பிதா இம்மூவரின் தொடர்புகளையும், நப்தா – பௌத்ரன் – புத்ரன் எனக் கூறி கன்யகாதானம் செய்கின்றோம். ஒரு துவிஜனுடைய வாழ்க்கையில் கோத்ரம் ப்ரவரம் அதிமுக்கிய இடத்தை வகிக்கின்றது.

கல்வி – வயது – ஒழுக்கம் உடைய பெரியோர்கள் வரும்போது சிறியோரின் ப்ராணன் மேல்கிளம்பி விடுமாம். அதனால்தான் பெரியோர்களைக் கண்டதும் எழுந்து அபிவாதனம் (நமஸ்காரம்) செய்ய வேண்டும். அப்படிச் செய்வதால் நமது பிராணன் நம்மிடமே நிலைத்து நிற்கும். என்று மகரிஷிகள் கூறியிருக்கின்றார்கள். இதை அநுசரித்து நடப்பதால் ஆயுள் விருத்தி ஏற்படும்.

சபையில் தகுதி உள்ள பெரியோருக்கு முதலிலும் ஏனையோர்க்கு அதே கிரமமாக அபிவாதனம் செய்ய வேண்டும்.

தீர்த்த பாத்திரம் – புஷ்பம் – தர்ப்பம் – நெய் – அன்னம் – சமித்து இவைகளைக் கையில் வைத்திருப்பவர்க்கும் ஹோமம் ஜபம் செய்து கொண்டிருப்பவருக்கும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு இருக்கும்போதும் ஆசாரக்குறைவு உள்ளவருக்கும் அபிவாதனம் செய்யக்கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோர்க்குப் பணிவிடையும் அபிவாதனமும் செய்வதால் நமக்கு நீண்ட ஆயுளும் நல்ல ஞாபகசக்தியும் நல்ல புகழும் திடகாத்திரமும் மனோபலமும் கிட்டும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ப்ரத்யபிவாதனம் – ஆயுஷ்மான் பவ ஸௌம்ய......ஶர்மன்!! என்று நமஸ்காரம் செய்கிறவனை ப்ரத்யபிவாதனம் (ஆசிர்வாதம்) செய்ய வேண்டும்.

## சுவைமிக்க சுலோகங்கள்

காக꞉ க்ருஷ்ண꞉ பிக꞉ க்ருஷ்ண꞉ கோ பேத꞉ பிககாகயோ꞉
வஸந்த காலே ஸம்ப்ராப்தே காக꞉ காக꞉ பிக꞉ பிக꞉

காகமும் கறுப்பு, குயிலும் கறுப்பு குயிலுக்கும் காகத்துக்கும் என்ன பேதம்? வசந்தகாலம் தொடங்கியதும் காகம் காகம் தான் குயில் குயில் தான்

அதே போன்று கற்றவர்களும் கற்காதவர்களும் ஒரேமாதிரியிருப்பதால் நாம் ஒருவரைத் தவறாக உடனே எடை போடக்கூடாது. அவரின் திறமை தக்க சமயம் வெளிப்படும்போதே அதன் மதிப்பையும் பெருமையையும் கண்டு வியந்து மகிழ்கிறோம்.

**சாகித்ய வியாகரணாசர்ய**
**ச. இரா. பாலகிருஷ்ண ஐயர்**
**அகில இலங்கை சமாதான நீதவான்**

## வணங்க வேண்டியவை

ஆரோக்கியம் பெறவேண்டின் ஆதித்தனை வணங்கு
செல்வம் பெற வேண்டின் இலட்சுமியை வணங்கு
சுகம் பெற வேண்டின் திருமாலை வணங்கு
ஆற்றல் பெற வேண்டின் அம்பிகையை வணங்கு
கல்வி பெற வேண்டின் கலைமகளை வணங்கு
வீரம் பெற வேண்டின் துர்க்கையை வணங்கு
பிள்ளைச் செல்வம் பெறவேண்டின் முருகனை வணங்கு
சிவபதம் பெற வேண்டின் சிவனை வணங்கு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொழும்பு ஸ்ரீ ராமகானசபையின் புதிய எழுச்சியில் பங்கு கொள்வோம்.

கொழும்புமாநகரில் கடந்த அறுபத்தாறு ஆண்டுகளாக அந்தணர்களின் ஆத்மார்த்த வைதிகப் பணிகளை ஆற்றுவதற்கு வாய்ப்பாகச் செயற்பட்டுவரும் ஸ்ரீ ராமகானசபா இப்போது இளரத்தம் ஊட்டப்பட்டுப் புத்துணர்ச்சியுடன் செயற்படத் தொடங்கியுள்ளது.

அதன் பணிகள் மேலும் பல்வேறு துறைகளில் பன்முகப் படுததப்பட்டு உத்வேகத்துடன் செற்படவுள்ளது. அதுசம்பந்தமான விபரங்கள் பல இரு மாதங்களுக்கு ஒருமுறை வெளிவருகின்ற "செய்தி மடல்'' பிரசுரத்தில் அறிய முடிகின்றது. விரைவில் புதிய இடத்தில் கால் பதிக்கவுள்ள ஸ்ரீ ராமகான சபை புதிய மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றையும் அமைக்க வுள்ளது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள அந்தணப் பெருமக்கள் சபையின் அங்கத்துவத்தைப் பெற்று அதன்



ஸ்ரீ ராம கான சபா

SRI RAMA GANA SABHA

Srilanka Brahmin Association

## செய்தி மடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Functions and future aspirations of SRI RAMA GANA SABHA.

1. To reconstruct the Sabha Building and provide facilities to the Brahmin community to conduct rites, weddings and other functions at a nominal fee.
2. To inculcate knowledge among Hindu Clergymen in Sastra arangas. The proposed interaction would enable the priests to enhance their knowledge and the resultant benefits passed down to the Hindu Community. For this purpose, the Sabha would provide assistance using its contacts in India and other countries.
3. To inculcate discipline among Brahmin Children by conducting lessons in Religion, Mantras [illegible].
4. To provide library facilities at the proposed New Sabha building.
5. To provide facilities to conduct religious seminars and other activities connected to development of Hinduism.
6. To provide facilities to conduct classes in computer Science, Music, Sanskrit for the benefit of the Sabha members.

**For more details please contact**

Sri N.Shanmuganathan
Chairman - Building Committee,
[illegible]
Colombo-[illegible]
Tel [illegible]
Fax [illegible]
e-mail [illegible]

Send your donations to:
A/C Name: "Sri Rama Gana Sabha"
A/C No: 0000821 23
Bank: Hatton National Bank Ltd.
Wellawatte, Sri Lanka

## Country Representatives of Sri Rama Gana Sabha

**Australia**

S.I.Venkadeshan
[illegible] Constitution Road,
Wentworthville,
N.S.W.2145, Australia
T.Phone / Fax [illegible]
Mobile [illegible]
e-mail [illegible]

G.Ragavan
[illegible] Park Street,
[illegible] Victoria 3195,
Australia
Tel [illegible]
e-mail [illegible]

**Canada**

Sri Ranganathan Rajeswara Sarma
31, Mercede Drive,
Etobicoke, ONT
[illegible] Canada
Tel [illegible]

**Denmark**

Subramania Ayer
[illegible]
7400 Herning
Denmark
Tel (97) [illegible]
e-mail [illegible]

**Germany**

U.Gobalakrishnan,
[illegible]
[illegible]
Germany
Tel [illegible]
e-mail [illegible]

**Newzealand**

K.K.Balachandra,
[illegible] Road,
Green Lane, Auckland,
Newzealand.
Tel [illegible]

**R.S.A.**

S.I.Merugiri Gurukkal,
P.O.Box-76827
[illegible] 4035
R.S.A.
Tel [illegible]

**U.A.E.**

A.S.Anandan
[illegible]
P.O.Box [illegible]
U.A.E.
Tel [illegible]
Fax [illegible]
e-mail [illegible]

**UK**

S.Suntharesa Kurukkal
No.4, Woodland Close,
Crawley, RS [illegible]
UK
Tel [illegible]

M.S.Srivathsa Sarma
No.241, [illegible] Road,
Harrow, Middlesex
HA1 4EX, UK
[illegible]

சேவைகளைத் தாமும் பெற்று மேன்மையடைவதுடன் அதன் பணிகளில் இணைந்துகொண்டு இயன்றவரை அதன் புத்தெழுச்சிக்கு உரமூட்டி உதவி செய்யவும் வேண்டும் என்று அன்போடு வேண்டிக்கொள்கிறோம்.

நாம் காலூன்றி நின்று நமது ஆத்மீக பலத்தை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக நமக்கென்று ஓரிடம் வேண்டும். அங்கு நாம் யாவரும் ஒன்றிணைவோம். இந்து சமூகத்தை ஆற்றுப்படுத்தி ஆன்மீகப் பெருவழியில் அழைத்துச்செல்லவேண்டிய பொறுப்பு அந்தணர்களாகிய நமக்கு உண்டு என்பதை நாம் என்றும் நினைவில் கொள்ளவேண்டும்.

தொடர்புகளுக்கு: ஸ்ரீ ஜி.எஸ். சுவாமிநாதன், ஸ்ரீராமகான சபா.
14, Sagara Road, Colombo 04, SriLanka.
TP 0112505115 Mobile 077 7802900.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நித்யகர்மா என்றால் என்ன?

(இது **அமரர் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா** அவர்கள் வாழும் காலத்தில் எழுதிய ஒரு குறிப்பு. இதற்கான பதிலை அறிஞர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.)

வைதிக காரியங்களைப் பக்தி சிரத்தையோடு செய்கின்ற அந்தணப் பெரியார்களை **ஷட்கர்ம நிரதர்** என்று ஏனையோர் பாராட்டுவதுண்டு. இதிலுள்ள ஆறுகர்மாக்கள் ஓதல் ஓதுவித்தல் முதலான அறு தொழிலென்றே பலரும் கருதுவர். ஆனால் இவற்றில் எவ்வளவு ஈடுபாடிருந்தாலும் இரண்டு மூன்று தொழிலைக் கூடத் தமது வாழ்நாளில் செய்யும் வாய்ப்பு சிலருக்கு வராமலே போகலாம்.

பின்வரும் சுலோகம் வேறு ஆறு கர்மாக்களைக் கூறுகின்றது. இவை பெரும்பாலும் நித்தியமும் அநுஷ்டிக்கக் கூடியவையே ஆயினும் சுலோகம் ஏழு கர்மாக்களைக் கூறிவிட்டு இவ் ஆறும் என்று குறிப்பிடுவதால் இதில் பாடபேதம் ஏற்பட்டிருக்குமோ என்று ஐயுற வேண்டியிருக்கின்றது. அறிஞர்களின் அறிவுரையை எதிர்பார்க்கின்றோம்.

ஒருவர் நாளாந்தம் செய்ய வேண்டிய நித்யகர்மாக்கள் ஆறினை அந்த சுலோகம் பின்வருமாறு வகுத்துத் தருகிறது.

ஸ்நானம் சந்த்யா ஜபோ ஹோமம்
தேவதானாம் சபூஜனம்
ஆதித்யம் வைஸ்வதேவம் ச
ஷட்கர்மானி தினே தினே

ஸ்நாநம் ஸந்த்யா ஜபோ ஹோம: தேவதாநாம் ச பூஜநம்।
ஆதித்யம் வைஶ்வதேவம் ச ஷட்கர்மாணி தினே தினே॥

ஸ்நானம், சந்தியாவந்தனம், ஜபம், ஹோமம், பூஜை, விருந்தினர் உபசாரம், வைஸ்வதேவம் (சிற்றுயிரோம்பல்) என்ற ஆறுகர்மங்களும் நித்யகர்மாக்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்க்ஷேப வார்த்தைகளும்

## சங்கேத வார்த்தைகளும்

விவித வித்யா 6ம் இதழில் இத்தலைப்பில் சம்ஷேப வார்த்தைகள் சிலவற்றைப் பார்த்தோம். சம்ஷேபம் என்பது சுருக்கம் எனும் பொருளுடையது. அவ்வகையில் ஷடுத்தாசனம் என்பது அனந்தாசனம் முதல் பத்மாசனம் வரையான ஆறு ஆசனங்களைக் குறிக்கும் எனவும் இதுபோன்ற சில விபரங்கள் அப்பகுதியில் இடம்பெற்றன.

இங்கே சங்கேத வார்த்தைக் சில காணப்படுகின்றன. சங்கேதம் என்பது குறியீடு. மறைமுகமான சில உட்கருத்துக்களை இச் சொற்கள் கொண்டிருக்கும். சம்ஸ்கிருத இலக்கியங்களிலும் சங்கேத வார்த்தைகள் இடம்பெறுவதுண்டு எனினும் பெரிதும் ஆகமங்களிலும் கிரியா பத்ததிகளிலும் இத்தகைய பிரயோகங்கள் விரவிக் காணபட்படுகின்றன.

## II. சங்கேத வார்த்தைகள்

1. கட்க மந்த்ரம் – அஸ்த்ர மந்த்ரம் ( கட்கேன ஹுத்வா என்றால் அஸ்த்ராய ஸ்வாஹா என ஆகுதி வழங்குதல்)
2. ரஸமுகம் – ஆறுமுகம் (ரஸ – ஆறு, அறுசுவை)
3. வசுகோணம் – எண்கோணம் (வசு – எட்டு, அட்டவசுக்கள்)
4. வேதசங்க்யயா – நான்கு முறை ( வேதங்கள் நான்கு)
5. பூதவாரம் – ஐந்து தடவை ( பூதங்கள் ஐந்து)
6. வர்மம் – கவசம். ( வர்மணா அவகுண்ட்ய என்றால் கவசாய நமஹ என அவகுண்டனம் செய்யவேண்டும்.

கண்டங்கத்தரிச் செடிக்கு 'கர்ப்பவாதி', 'கோப்தார்' முதலிய பெயர்கள் உண்டு. இச்செடியில் மலட்டுத் தன்மையைப் போக்கும் இயல்புகள் உள்ளன. கண்டங்கத்தரி வேர் ஆண்மலட்டுத் தன்மையையும், காய் பெண்மலட்டுத் தன்மையையும் போக்கும் என மருத்துவ நூல்கள் கூறுகின்றன. பொதுவாகவே இருபாலாரதும் பாலியல் உறுப்புக்களின் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு இச்செடி உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபுதாபியில் ஒலிக்கும் மஹா ந்யாசம்

இன்று ஐரோப்பிய நாடுகளில் எமது இந்துசமயம் சார்ந்த செயற்பாடுகளும் கலை, கலாசார பண்பாட்டு நடவடிக்கைகளும் இடம்பெறுவது புதினமான ஒன்றாகப் பேசப்படுவதில்லை. ஆனால், அரபுநாடுகளில் ஒன்றான அபுதாபியில் ஒவ்வொரு பிரதோஷவிரத நாட்களிலும் அந்தண சிரேஷ்டர்களால் சிவபெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நடப்பதுடன் மிகச் சிறப்பு வாய்ந்த வேதமந்திரமான மஹாந்யாசம் பாராயணம் செய்யப்படுகின்றது என்ற செய்தி அதிசயமானதாக இல்லையா?

வட்டுக்கோட்டை மங்களாம்பிகை சமேத மங்களேஸ்வரர் தேவஸ்தான ஆதீனகர்தர் பரம்பரையினரான நாவன்னா குடும்பத்தினர் என அழைக்கப்படும் குடும்பத்தில் ஒருவரும் பிரபல மிருதங்க வித்வான் அமரர் கணேச சர்மா அவர்களின் மகனுமாகிய பிரம்மஸ்ரீ அனந்தசுப்பிரமணிய சர்மா அவர்கள் அபுதாபியில் வேலை செய்பவர். தங்கள் பாரம்பரிய சிவாலயத்தின் மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவில் கலந்துகொண்டு தமது பங்களிப்பையும் செலுத்த வந்திருந்த அவர்கள் நமக்கு இந்த அபூர்வ செய்தியைத் தெரிவித்தபோது மெய்சிலிர்த்தோம்.



பாரத நாட்டிலிருந்தும் பல அந்தணர்கள் அந்த நாட்டிற்குச் சென்றிருப்பது இத்தகைய செயற்பாட்டிற்கு ஊக்கமளிப்பதாக அமைகிறது. தினந்தோறும் அதிகாலையில் சிறுவர்களுக்கும் மாலையில் பெரியவர் களுக்குமாக வேதாத்யயன வகுப்புக்களை








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குசெய்துள்ளனர். அத்தனை இறுக்கமான கட்டுப்பாடுகள் உள்ள முஸ்லிம் தேசத்தில் வாழ்கின்றபோதிலும் தமதுபண்பாட்டுணர்வை மறக்காது, அதேநேரம் அந்தநாட்டு மக்களின் சமய உணர்வுகளுக்கு எந்தவித பங்கமும் ஏற்படாமல் நான்கு சுவர்களுக்கு நடுவில் நம்மவர்கள் யாவரும் ஒன்றாகக்கூடி சமய விழாக்கள் சடங்குகள் என்பவற்றை அடக்கமாக, எளிமையாக, ஆனால் எதுவித குறைவுமின்றி ஆனந்தமாகக் கொண்டாடுகிறார்கள்.

சிவராத்திரி விழா, உபாகர்மம் முதலியவற்றைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். நம்நாட்டவர்களும் இந்தியர்களும் இவற்றில் கலந்துகொள்கின்றனர். பெண்களும் உற்சாகமாக இவற்றில் ஈடுபடு கின்றனர்.







பிரம்மஸ்ரீ **அனந்தசுப்பிரமணிய சர்மா** அவர்களுடன் அவரது குடும்பத்தினரும் வந்திருந்தனர். அவர்களது மகன் செல்வன் **ராம்** பலரது கவனத்தை ஈர்த்தான். ஸ்வர சுத்தமாகவும் இனிமையாகவும் வேதமந்திரங்களை அவன் ஓதியபோது யாவரும் வியப்படைந்தனர்.

அபுதாபியில் இவர்களால் நடத்தப்படும் சிறப்பு நிகழ்ச்சிகளில் மிக முக்கியமானது வேதமோதும் மாணவர்களுக்கிடையே நடைபெறுகின்ற போட்டி நிகழ்ச்சியாகும். மிகப்பெரிய ஒரு விழாவாக இப்போட்டிநிகழச்சியை அவர்கள் நடத்துகிறார்கள். உற்சாகத்துடன் கலந்துகொள்ளும் மாணவர்களுக்குப் பரிசில்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருக்கார்த்திகை, திருவெம்பாவை முதலிய வைபவங்களை எப்போது கொண்டாடுவது என்பதில் முரண்பாடுகளை நீக்கி ஒருமித்த முறையில் செய்யவோ நமது பிள்ளைகள் படிப்பதற்கு ஒரு குருகுலம் அமைத்து ஒற்றுமையாக நடத்தவோ நமக்குரிய



நிறுவனங்களை பரஸ்பர புரிந்துணர்வுடன் ஒன்றுகூடி வளர்க்கவோ முடியாமல் திண்டாடும் நமக்கு இந்த விஷயம் வியப்புக்குரிய ஒரு முன்மாதியாக இருக்கிறதல்லவா?









## இருக்க வேண்டியவை

நிதி உள்ளவனுக்கு நீதி இருக்க வேண்டும்.
தனம் உள்ளவனுக்கு தானம் இருக்க வேண்டும்
மனம் உள்ளவனுக்கு மானம் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்குப் பெருமை சேர்க்கக் கூடிய பெரும் பண்புகள்

பெண்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் வாழ்க்கையின் முன்னோடிகளாகத் திகழ வேண்டும். ஒவ்வொரு ஆண்களின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்று சொல்வார்கள். அது முற்றிலும் உண்மை. எனவே பெண்களுக்கு பெருமை தேடிக் கொடுப்பது அவர்கள் பண்புகள்தான். அவ்வாறான பண்புகள் சில.

1. பெண்கள் சூரியோதயத்திற்கு முன்னர் துயில் நீங்கி எழுதல் வேண்டும். காலைக்கடன்கள் முடித்த பின்னர் தலைசீவி நெற்றியில் திலகம் இட வேண்டும். எக்காரணம் கொண்டும் தலைவிரித்தபடி பெண்கள் திரிவதோ நெற்றிக்கு திலகம் இடாமல் இருப்பதோ கூடாது. அவ்வாறு இருப்பின் வாழ்நாளில் பின்னர் தலைவிரிகோலமாக நெற்றிக்கு திலகம் இட முடியாது இருந்து வருந்த நேரிடும்.

2. நெற்றிக்குத் திலமிடும் போது ஆள்காட்டி விரலால் இடக் கூடாது. ஆள்காட்டி விரலுக்குச் சுட்டு விரலென்றும், ஆணவ விரலென்றும் பெயர். நாம் எம்மை அறியாமல் தற்பெருமை பேசும்போதும் ஆணவத்துடன் பேசும்போதும் கோபத்துடன் பேசும்போதும் அதனைக் காட்டியே பேசுவது வழக்கம். இதனால் நாமே எமக்கு ஆணவத்தைத் தேடிக் கொள்கின்றோம். எனவேதான் மோதிர விரலால் (சிறுவிரலுக்கு முதல் விரல்) திலகமிட வேண்டும் எனப் பெரியோர்கள் கூறுவர். இது பெருமை தரக் கூடியது.

3. தற்கால இளம் பெண்கள் மட்டுமல்ல சில குடும்பப் பெண்களும் நாகரி வளர்ச்சி என கருதிக் கறுப்பு நிற, சிவப்பு நிற ஆடைகளை அணிவதையும் கறுப்பு, சிவப்பு சேர்ந்த ஆடைகளை அணிவதையும் நடைமுறையில் காணக்கூடியதாகவுள்ளது. கறுப்பு துன்பத்தைக் குறிப்பதாகும். சிவப்பு அபாயத்தை குறிப்பதாகும். எனவே அவ்வாறு அணிபவர்கள் வாழ்வல் துன்பங்களும் அபாயங்களும் சேர்ந்து வருவதை நாம் நிச்சயமாக அவதானிக்கலாம்.

சிலர் கேட்கலாம், கூறைச்சேலை சிவப்புத்தானே. முகூர்த்த காலத்தில் அதைத்தானே அணிகிறார்கள் என்று. ஆனால் அது தனிச் சிவப்பு அல்ல. அத்துடன் அது பொன்னிறம் கலந்த மஞ்சள் சரிகை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை என நிறம் உள்ளதால் தோஷமில்லை. இங்கு நாம் தனியான சிவப்பு தனிமையான கறுப்பையோ அல்லது அதிகமான கறுப்பையோ துக்கம் எனக் குறிப்பிடுகின்றோம்.

பெண்கள் முந்தானையை ஆடவிட்டு நடக்கக் கூடாது. அவ்வாறு நடந்து கொண்டால் குடும்பம் ஆடிப்போகும் என்று கூறுவர்.

பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டும்போது அழகான தமிழ்ப் பெயர்களை இடுவது சாலச்சிறந்தது. நடைமுறையில் நாகரிகம் எனக் கூறிக்கொண்டு செல்லப் பிராணிகளுக்குச் சூட்டும் பெயர்களைச் சூட்டுவதால் அவர்களுக்கும் அதற்கேற்றாற்போல் ஆறாவது அறிவு அற்றுப் போய்விடுகிறது.

பெண்களின் நடை, உடை, பாவனை, உபசாரம் முதலியன சிருங்கார சேஷ்டைக்குக் காரணமாக இருப்பதால் பெண்கள் அளவோடு தம்மை நடத்திக் கொள்ள வேண்டும்.

வீடுகளில் காலையும், மாலையும், சாம்பிராணி போன்ற சுகந்த தூபமிட்டு நறும்புகை கமழச் செய்வதால் இலட்சுமி கடாட்சம் உண்டாகும். வாசனை உள்ள இடத்தில் இலட்சுமி தங்குவதால் சம்பத்துக்கள் பெருகும்.

திருவிளக்கை வாயினால் ஊதக்கூடாது. அசுத்தமான பொருள் எதனையும் நெருப்பிலிடல் ஆகாது. அத்துடன் பூச்சி, புழு முதலியவற்றையும் நெருப்பிலிட்டுப் பொசுக்குதல் கூடாது.

பெண்கள் கண்ணீர் சிந்தும் இடத்தில் தேவர்கள் நுழையமாட்டார்கள். எனவே வீட்டுக்காரன் பெண்களை மனம் நோக விடாது காப்பாற்றுதல் சுபிட்சமும் மங்களமும் பெருக வழியாகும்.

பெண்கள் ஸ்நானம் செய்யும்போது மஞ்சள் பூசி ஸ்நானம் செய்வது நல்லது. மஞ்சள் பூசுவதால் முகமும் உடலும் புதுப் பொலிவு பெறுகிறது. அத்துடன் அவர்கள் முகம் இலட்சுமிகரமாக விளங்குவதுடன் மஞ்சள், நோய் நீக்கும் தன்மை உடையது என்பதை நாம் உணர வேண்டும்.

அடுத்த இதழில்..........

**அற்புத ஆலயங்கள் அறிமுகம்** -- புதிய தொடரில்

## அற்புதம் நிறைந்த ஆவரம்பிட்டி அன்னை

**-- கந்தரோடை, சிவஸ்ரீ ப. ஜெயராமக் குருக்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகத் தே(ா)ட்டம்




இம்முறையும் நீண்ட இடைவெளியின்பின் விவிதவித்யா வெளிவருவதால் இந்த இடைவெளியில் பல நல்ல நூல்கள் வெளிவந்துள்ளன. வழமைபோலவே எமது தகவலுக்கெட்டியவரை சிறந்த சமய சம்ஸ்கிருத நூல்களின் விபரங்களை இங்கு தருகிறோம்.

"இங்கு இடம்பெறாத நூல்கள் சம்பந்தமான விபரங்களைச் சம்பந்தப்பட்டோர் தந்துதவலாம்" என்றும் "எதிர்காலத்தில் நல்ல நூல்களை வெளியிடுவோர் எம்மோடு தொடர்பு கொண்டால் அவற்றின் விபரங்களை வாசகர்களுக்குத் தரமுடியும்'' என்றும் கடந்த இதழிலும் அறிவித்திருந்தோம்.

*மனத்தை நெருடுவதால் ஒரு செய்தியை இங்கு கூறலாம் என எண்ணுகிறோம். பொதுவாகப் பத்திரிகைகள் நூல்களைப்பற்றிய செய்திகளை வெளியிடுவதற்கு இரு பிரதிகளை அனுப்பவேண்டும் என அறிவிப்பது வழக்கம். ஆனால் அவ்வாறில்லாமல் தகவலை மட்டும் தந்துதவும்படி விவிதவித்யா கேட்டிருந்தும் அதைக்கூட வழங்குவதில் அக்கறையில்லாமல் சில நூல்வெளியீட்டாளர்கள் உள்ளனர். எனினும் சில தகவல்கள் கிடைத்திருப்பதால் இவ்விதழில் அவற்றையும் சேர்த்திருக்கின்றோம்.*

*(ஆனால், உலகப்புகழ் பெற்ற, மிக உயர்ந்த நிலையிலுள்ள அறிஞர் பெருமக்கள் பலரும் நிறுவனங்களும் தம்மைப் பற்றிய செய்திகள் விவிதவித்யாவில் வெளிவருவது பெருமைக்குரியது என எண்ணி எம்முடன் தொடர்புகொண்டு வருகின்றனர் என்ற பெருமைக்குரிய தகவலையும் புளகாங்கிதத்துடன் இங்கு தெரிவிக்க வேண்டும்.)*

நியாய சிரோமணி கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களின் நூல்கள் பல மறுபதிப்பாக வரவிருக்கின்றன எனற நல்ல செய்தியை முன்னொரு தடவை தந்திந்தோம். அதன்படி "நியாய லகு வியாகரணம்" என்ற இலக்கணப் பாடநூல் கடந்த வருடம் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து



''நவராத்திரி பூஜா விதி''யும் அண்மையில் வெளிவந்துள்ளதாக அறிகின்றோம்.

நாயன்மார்கட்டு 'அரசகேசரி ஆட்ஸ்' பிரசுரமாகவும் சில நூல்கள் வெளிவந்ததாகத் தெரியவருகின்றது. அவற்றுள் ஒன்று, "அக்கினி கார்யம்".





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா சிவஸ்ரீ க. தர்மலிங்கக் குருக்கள் ஸ்ரீமதி ஜெயலட்சுமி தம்பதிகளின் ஷஷ்டியப்த பூர்த்தி விழா வெளியீடாக "விக்னேஸ்வர அர்ச்சனா கதம்பம்" என்ற நூல் 23-12-2005 இல் வெளியிடப்பட்டுள்ளது.

துன்னாலை சிவஸ்ரீ கா. சபாரட்ணக் குருக்கள் ஞாபகார்த்தமாக 22-12-2005 இல் "ஸ்ரீ சுப்ரம்மண்யர் அர்ச்சனா கதம்பம்" என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விரு நூல்களும் பஞ்சாசன பூஜை, நியாசங்கள், சஹஸ்ர, திரிசதி, அஷ்டோத்தரசத நாமார்ச்சனைகளும் கணபதி உபநிஷத், சுப்ரம்மண்ய மாலா மந்த்ரம் முதலியவற்றையும் கொண்ட தொகுப்பாக கையடக்கமான சிறிய அளவில் வெளியிடப்பட்டுள்ளது.

மருதனார்மடம் அருள்வளர் சுந்தர ஆஞ்சனேயர் துதிப்பாடல்கள் என்ற தொகுப்பு நூலொன்று 01-10-2005 இல் பிரசுரமாகியுள்ளது.

பண்டிதர் சிவத்திரு ச. சுப்பிரமணியம் அவர்களின் நினைவு மலராக வெளியாகியுள்ள "பண்டிதர் மணி" நூல் அவரது வாழ்க்கை பணி, அவரால் வெளியிடப்பட்ட நூல்கள் முதலிய பல்வேறு தகவல்களையும் உள்ளடக்கிய ஆவணமாக இது அமைகிறது. இதன் தொகுப்பாசிரியர், கோப்பாய் சிவம் ஆவார்.

அராலி தெற்கு அமரர் ஸ்ரீமதி தியாகராஜக் குருக்கள் நாகம்மா அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியான "நாகதீபம்" பிரதோஷ மகிமை, புற்று நோய் பற்றிய தகவல்கள், இறப்பு தொடர்பான தோஷங்களும் பரிகாரங்களும் முதலிய தகவல்களைக் கொண்டிருக்கிறது.

அமரர் சிவஸ்ரீ சோ. நடராஜக் குருக்கள் ஞாபகார்த்த வெளியீடாக 01-10-2005 இல் வெளியான "தத்துவ சிந்தனைகள்" நூல் கோப்பாய் சிவம் அவர்களின் சைவ நற்சிந்தனைகள் சிலவற்றின் தொகுப்பாக அமைந்துள்ளது.

08-09-2005 இல் அம்பிகாலய வெளியீடு - 2 என்ற மகுடத்துடன் சிவஸ்ரீ ந. தாமோதரக்குருக்கள் குடும்பத்தினரால் வெளியிடப்பட்ட நூல் "சண்டேஸ்வரர் யாக மண்டப பூஜை". அவர்கள் இப் பத்ததி நூலில் தமது குடும்ப முதல்வர் அமரர் சிவஸ்ரீ சின்னையர் நடராஜக் குருக்கள் அவர்களையும் அமரர் செல்வன் தாமோதரக் குருக்கள் பார்த்திப சர்மா அவர்களையும் நினைவு கூர்ந்துள்ளனர்.

அமரர் ஸ்ரீமதி பத்மாவதி அம்மா சிவசண்முகானந்தேஸ்வர சர்மா ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் வெளியிட்டிருப்பது "ஸ்ரீ துர்க்காதேவி யாகமண்டப பூஜா". இந்நூலின் மூலப்பிரதி கொழும்பு சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் அவர்களுடையதாகும்.


சபரீச தாசன் சிவஸ்ரீ தாணு. வாசுதேவக் குருக்கள் அவர்கள் தமது தாயாரின் ஞாபகார்த்தமாக இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் அவர்களால் தொகுக்கப்பெற்ற "ஸ்ரீ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மசாஸ்தா கல்ப பூஜாக்கிரமம்" என்ற நூலை ஐயப்பன்மார்கள் மாலை அணிந்திருக்கும் இந்தப் பொருத்தமான சந்தர்ப்பத்தில் வெளியிட்டிருக்கிறார்.

சுன்னாகம், மயிலணி அமரர் சிவஸ்ரீ ச. வரதராஜேஸ்வரக் குருக்களின் இரண்டாம் ஆண்டு ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் "வைதிக ஆபஸ்தம்ப சௌளமும் உபநயனமும்" என்ற நூலை வெளியிட்டிருக்கின்றனர்.


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை உருவாக்கிய மயிலணி சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் இவ்விரு சம்ஸ்காரங்களையம் நடத்தி வைக்கக்கூடிய பத்ததி நூலாக அமையும் அதேநேரத்தில் கிரியா விளக்கங்கள், மந்திரங்களின் உட்பொருள் எனபவற்றையும் செம்மையாகத் தொகுத்திருக்கிறார்.

அமரர் பிரம்மஸ்ரீ வ. அரிஹரசர்மா ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் 03-11-2005 இல் "வீரபத்திரர் யாகமண்டப பூஜா" நூலை வெளியிட்டுள்ளனர்.

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவில் வேரற்கேணி சிவஸ்ரீ க.ச. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் ஆவணி மூல நன்னாளில் (12-09-2005) "சிவ யந்த்ர பூஜா" நூலை வெளியிட்டிருக்கிறார்.

சர்வானந்தமய பீடம் இக்கால இடைவெளியில் ஏழு நூல்களை வெளியிட்டுள்ளது.

"சம்க்ஷேபக்கிரம யாகமண்டப பூஜா சங்கிரகம், பாகம் - II" என்ற நூலில் மஹாமாரி, மஹாலக்ஷ்மி, மஹாசாஸ்தா, தக்ஷிணாமூர்த்தி, சண்டேஸ்வரர் ஆகிய தெய்வங்களுக்குரிய மண்டப பூஜைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

"கும்பாபிஷேக திரவிய சூடாமணி" என்ற பட்டியல் நூலின் மறுபதிப்பு சில திருத்தங்கள் சேர்க்கைகளுடன் வெளியிடப்பட்டுள்ளது.

புங்குடுதீவு சிவஸ்ரீ இரகுநாதக்குருக்கள் தம்பதிகளின் ஷஷ்டியப்த பூர்த்தி வெளியீடாக வெளியிடப்பட்ட வேத மந்திரங்களின் தொகுப்புநூல் பிரதிகள் தீர்ந்து பலரும் விரும்பிக் கேட்டதற்கிணங்க மறுபதிப்பாக "ஸ்வரஸகித வேத மந்திரங்கள்" என்ற பெயரில் சர்வானந்தமய பீடத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இணுவில் சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் தம்பதிகளின் ஷஷ்டியப்த பூர்த்தி விழா வெளியீடாக வெளியிடப்பட்ட "ஸ்பர்ஸாகுதிப் பிரயோக மஞ்சரி" நூலை அடியொற்றிப் பலரின் வேண்டுகோளின்படி தனித்தனியே "விக்னேஸ்வர ஸ்பர்ஸாகுதி", சிவ-சக்தி ஸ்பர்ஸாகுதி", சுப்பிரமணிய ஸ்பர்ஸாகுதி", க்ஷேத்ரபால ஸ்பர்ஸாகுதி" என்ற நான்கு நூல்களாக இப்போது சர்வானந்தமய பீடத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

---

## அடுத்த இதழில்..................

*மயிலணி சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள் எழுதிய*

**அக்னியின் சிறப்பு**

*வியாகரணாசார்ய பிரம்மஸ்ரீ ச. இரா. பாலகிருஷ்ண ஐயரின்*

**சிசுபால வதம் தந்த மாக கவி**

*மாவை சிவஸ்ரீ சு.து. சுந்தரமூர்த்திக் குருக்கள் B.A. அவர்களின்*

**விபூதியை வணங்கிப் போற்றுவோம்**

*கோண்டாவில்பூர் சிவஸ்ரீ கி. சதாசிவக் குருக்கள் எழுதிய*

**நலந்தரும் நல்லவை**

*பிரான்ஸ் பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா வழங்கும்*

**அந்தணரல்லாதோரின் வடமொழிக் கல்வி**

*கிழக்குப் பல்கலைக் கழகம் திருமதி ஜயந்தி திசநாயக்காவின்*

**பாடுவோம் தேவியைப் பொருளுணர்ந்து**

**மற்றும் வழமையான அம்சங்களும் பல்வேறு சிறப்பம்சங்களும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் ஒரு யோகாசனப் பயிற்சி நிலையம்



வவுனியாவில் குடியிருப்பு விநாயகர் ஆலய அருகிலே அதன் பிரதமகுரு சிவஸ்ரீ மு.க. கந்தசாமிக் குருக்கள் அவர்களால் யோகாசன வகுப்புக்கள் நடத்தப்பட்டுவருகின்றன. 1977ஆம் ஆண்டிலே மட்டுவில் சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்களின் அருளாசியுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வகுப்பினால் பலர் நலம்பெறுகின்றனர்.

அருள்மொழி அரசு கிருபானந்த வாரியாரினால் "யோகாசன சித்தர்" என்று புகழப்பட்ட குருக்கள் அவர்கள் சிறந்த ஒரு ஜோதிட விற்பன்னருமாவார். விநாயகர் சோதிட நிலையம் என்பது அவரது சோதிட நிறுவனமாகும்.

குறிப்பிட்ட சில ஆசனங்களின்மூலம் சில நோய்கள் தீர வழிகாட்டும் இவர் இவ்வாசனங்களைப் பழகிப் பயின்று வருவதன்மூலம் உடலை எப்போதும் இளமையாக வைத்திருக்கலாம் என்று கூறுகிறார்.



**மயூர பத்மாசனம்:**

இது வயிற்று மடிப்பைக் குறைக்கும். நெஞ்சு எலும்புகள் பலம்பெறும். கால், கை உளைவு தலையிடி நீங்கும்.



**விபரீதகரணி:**



பெண்களின் மாதவிடாய்க் கோளாறுகள் தீரும். இடுப்பு, முதுகு வலி குறையும். மார்பு அழகாய் வளரும்.

**திரிகோணாசனம்:**

கழுத்துப் பிடிப்பு, கண்வருத்தம் முதலியவற்றைப் போக்கும். பெண்களின் வயிற்றுக்குத்து முதலியன நீங்கும்.

## விநாயகர் யோகா நிலையம்

**யோகாசன சித்தர் சிவஸ்ரீ மு.க. கந்தசாமிக் குருக்கள்**

**குடியிருப்பு, வவுனியா. தொ.பே. 024 222 1246**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிர்ப் போட்டி விடைகள்

விவிதவித்யா ஆரம்ப இதழ்களில் வெளியான புதிர்ப்போட்டி 1, 2 ஆகியவற்றின் விடைகள் இங்கு பிரசுரமாகின்றன. புதிர்ப்போட்டி 3 இன் விடை அடுத்த இதழில் பிரசுடமாகும்.

1. வை கொநாவிம்மதி நாய்ய: ஹ்ரீடாம் கூதூம் வநம் மத:।
விம்மதிமூரஹம் சூயாதா: மெஷா வ்யாமெருண ஹகூிஷித:॥

பொருள் - ஒன்று குறைந்த இருபது (பத்தொன்பது) பெண்கள் விளையாடக் காட்டிற்குப் போனார்கள். இருபது பேர் வீட்டுக்கு வந்தனர். எஞ்சியவன் புலியினால் உண்ணப்பட்டான்.

இந்தப் புதிர்ப்பாடலில் 19 பேர் போய் இருபது பேர் திரும்பிவர இன்னொருவன் புலியால் உண்ணப்பட்டான் என்பதற்கு எவ்வாறு விளக்கமளிப்பீர்?

விளக்கம்: வைகூ ஊநா விம்மதி ஒன்று குறைந்த இருபது அதாவது பத்தொன்பது என்பது பொதுவான பொருள். ஆனால்,

வைகூ: நா விம்மதி நாய்ய: என இதனைப் பிரித்தால் நா என்பது நர சப்தம். மனிதன் என்பதன் முதலாம் வேற்றுமை ஒருமை. எனவே ஒரு மனிதனும் இருபது பெண்களும் என்பது இதன் பொருள். (நா நரள நர: । விதர சப்தம் போல.)(குறிப்பு நர: என்பது வேறு. அகாராந்த பும்லிங்க சப்தம்.)

ஆகவே ஒரு மனிதனும் 20 பெண்களும் காடு சென்று ஒரு மனிதனைப் புலி உண்டுவிட 20 பெண்களும் திரும்பி வந்தனர் என்பது கருத்து.

2. கம் ஹம்ஜவாந கூரஷ்ண:? கா மீதலெ வாஹிநீ மஜா?।
கெ ஊரா வொஷெண ரதா:? கம் பெமுவஙம் ந வொயதெ மீத:?॥

யாரைக் கிருஷ்ணன் கொன்றான்? எந்த கங்கை குளிர்ந்த பெருக்குடையது? யார் மனைவியைக் காப்பதில் வல்லவர்கள்? எதனைக் குளிர் தாக்குவதில்லை?

இவற்றின் விடைகள் செய்யுளிலேயே உள்ளன.

கம் ஹம்ஜவாந (எவனைக் கொன்றான்?) என்பதை கம்ஹம் ஜவாந எனப் பிரித்தால் கம்சனைக் கொன்றான் என்பது விடை.

கா மீதலெ என்பதில் காமீ என்பது விடையாக அதாவது காசியில் உள்ள கங்கை என்பது வருகிறது.

கெ ஊரா எவர் மனைவி? கெஊரா எனச் சேர்த்தால் வயல் என்பது விடை.
கம் பெமுவஙம் என்பதில் கம்பெமு என (கம்பளம்) விடை கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கஸ்தூரீ ஜாயதே கஸ்மாத்? கோ ஹந்தி கரிணாம் குலம்?
கிம் குர்யாத் காதரோ யுத்தே ம்ருகாத் ஸிம்ஹ: பலாயதே॥

கஸ்தூரி எங்கிருந்து உண்டாகிறது? எது யானைக் கூட்டத்தைக் கொல்கிறது? பயந்தவன் யுத்தத்தில் என்ன செய்வான்? சிங்கம் மானுக்குப் பயந்தோடுகிறது.

இந்தச் செய்யுளில் மூன்று வினாக்களும் பொருத்தமற்ற ஒரு வாக்கியமும் உள்ளது. இதனை எவ்வாறு விளக்கலாம்?

விளக்கம்: முதல் மூன்று வினாக்களின் விடையாக நான்காவது சொற்றொடரின் மூன்று சொற்களும் அமைகின்றன.

| | |
|---|---|
| கஸ்தூரீ ஜாயதே கஸ்மாத்? | ம்ருகாத் |
| கஸ்தூரி எங்கிருந்து உண்டாகிறது? | மானிடம் |
| கோ ஹந்தி கரிணாம் குலம்? | ஸிம்ஹ: |
| எது யானைக் கூட்டத்தைக் கொல்கிறது? | சிங்கம் |
| கிம் குர்யாத் காதரோ யுத்தே? | பலாயதே |
| பயந்தவன் யுத்தத்தில் என்ன செய்வான்? | பயந்தோடுகிறான். |

4. ப்ராதர்த்யூதப்ரஸங்கேன மத்யாஹ்னே ஸ்த்ரீ ப்ரஸங்கத:।
ஸாயம் சௌர ப்ரஸங்கேன காலோ கச்சதி தீமதாம்॥

அறிஞர்களது காலைப்பொழுது சூதாட்டத்திலும் நண்பகல் பெண் தொடர்பிலும் மாலைப்பொழுது திருட்டிலும் கழிகிறது.

இச்செய்யுளின் உட்பொருள் என்ன?

விளக்கம்: சூதாட்டத்தை முதன்மையாகக் கொண்ட பாரதக்கதையைப்படிப்பதில் காலைப் பொழுதும் சீதை என்ற பெண்ணின் வரலாறு கூறும் இராமாயணக்கதை படிப்பதில் மதியமும் வெண்ணெய் திருடிய கண்ணன் கதை கூறும் பாகவதம் படிப்பதில் மாலைப் பொழுதும் அறிஞர்களுக்குக் கழிகிறது.




## விடைகள்

விவிதவித்யா ஆரம்ப இதழ்களில் வெளியான சொல்லறிவுப்போட்டி 1, 2 ஆகியவற்றின் விடைகள் இங்கு பிரசுரமாகின்றன. புதிர்ப்போட்டி 3, 4 இன் விடை அடுத்த இதழில் பிரசுடமாகும்.

1. விநாயகருடைய நாமங்களில் ஃபால சந்த்ர என்பதே சரி. பால சந்த்ர என்பது தவறு. ஃபால என்பது நெற்றி. நெற்றியில் சந்திரனை அணிந்தவர் என்பதே பொருள். இது அன்மொழித் தொகை. பால சந்த்ர என்றால் இளம் சந்திரன் என்பது பொருள். இது பண்புத் தொகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கரிமுகன் - கரம் என்றால் கை. கையையுடைய முகத்தையுடையவன்.
தும்பிமுகன் - தும்பா என்றால் சுரைக்காய். சுரைக்காய் போன்ற முகத்தையுடையவன்.
அத்திமுகன் - ஹஸ்தம் அல்லது அத்தம் என்பது கை. ஹஸ்திமுகம் கையையுடைய முகம். அத்திமுகம் எனவும் வரும்.

3. அவிக்னம் - இடையூறின்மை. பெயர்ச்சொல்.
அவிக்னம் குரு - இடையூறின்மையைச் செய். இதுவே சரி.
நிர்விக்னம் - இடையூறின்றி - இது வினையெச்சம்.
(அடைமொழியாகவும் வரும்.) இது அந்தச் சுலோகத்தில் வருவது பொருத்தமில்லை.

4. கணானாம் த்வா என்ற வேத மந்திரத்தில் பிரம்மணான் எனச் சொல்வது பிழை. பிரம்மணாம் என ஆறாம் வேற்றுமையில் வருவதே பொருத்தம். (பிரம்மன் என்பதே மூலச் சொல்.)

5. கஜமுக - யானைமுகனாகிய பிள்ளையார்.
சதுர்முக - நான்முகனாகிய பிரம்மா
பஞ்சமுக - ஐம்முகனாகிய சிவபிரான்
ஷண்முக - ஆறுமுகனாகிய முருகன்
பஞ்சமுக, பஞ்சாஸ்ய - ஒரு மிருகத்தின் பெயர். சிங்கம் என்பதே விடை. பஞ்ச என்பதற்கு அகன்ற என்ற பொருளும் உண்டு. அகன்ற முகமுடையது சிங்கம். ஆஸ்யம் என்றாலும் முகம்.

6. அஜமுகி - கந்தபுராணத்தில் வரும் அசுரப் பெண்.
சதமுகி - யார்? ( இவள் பெண்ணல்ல)
சதமுகி என்றால் துடைப்பம். (விளக்குமாறு) நூறு என்பது இங்கே அதிகம் என்பதைக் காட்ட வருகிறது. பலமுகம் உடையது என்ற கருத்தில் அதிக ஈர்க்குகால் ஆக்கப்படுவதனால் இப்பெயர் வந்தது. விளக்குமாற்றின் இன்னொரு பெயர் சம்மார்ஜனீ கூட்டுவது எனக் காரணப் பெயர்.

7. பாயசம், பாயாசம் - எது சரி?
பாயசம் என்பதே சரி. பயஸ் என்பது பால் அல்லது தண்ணீர். பயஸ் மூலம் தயாரிக்கப்பட்டது என்ற கருத்துடைய தத்திதப் பெயர்.

8. பஞ்சபாத்திரம் என்ற பெயர்க் காரணம் யாது ?
ஐந்து உலோகங்களால் ஆனது என்பது தவறானது. ஐந்தாவது வினாவின் விடையில் குறிப்பிட்டபடி பஞ்ச என்றால் அகன்ற எனப் பொருள். அகன்ற வாயுடைய பாத்திரம் என்பதே சரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வானந்தமய பீட நூல் வெளியீடுகள்.

### சம்ஸ்கிருத (கிரந்த எழுத்தில்) நூல்கள்

1. யாகமண்டப பூஜா - பாகம் 1 325.00
(விநாயகர், சிவன், அம்பாள், சுப்பிரமணியர், பைரவர்)
2. யாகமண்டப பூஜா - பாகம் 2 325.00
(மஹாமாரி, மஹாலக்ஷ்மி, மஹாசாஸ்தா, தக்ஷிணாமூர்த்தி, சண்டேஸ்வரர்)
3. நவகுண்டபூஜா 225.00
(விநாயகர், சிவன், அம்பாள், சுப்பிரமணியர், பைரவர்)
4. பஞ்சகுண்ட பூஜா 175.00
(விநாயகர், சிவன், அம்பாள், சுப்பிரமணியர், பைரவர்)
5. விக்நேஸ்வர ஸ்பர்ஸாகுதி 150.00
(ஏக குண்டம், பஞ்சகுண்டம், நவகுண்டம்)
6. சிவசக்தி ஸ்பர்ஸாகுதி 250.00
(ஏக குண்டம், பஞ்சகுண்டம், நவகுண்டம்)
7. சுப்பிரமணிய ஸ்பர்ஸாகுதி 200.00
(ஏக குண்டம், பஞ்சகுண்டம், நவகுண்டம்)
8. க்ஷேத்ரபால ஸ்பர்ஸாகுதி 150.00
(ஏக குண்டம், பஞ்சகுண்டம், நவகுண்டம்)
9. வீரபத்திரர் யாகமண்டப பூஜா 200.00
10. விக்நேஸ்வர நாமார்ச்சனா மஞ்ஜரி - நியாச சகிதம் 75.00
(ஸஹஸ்ரநாமம், த்ரிசதி, அஷ்டோத்தரசதம், ஷோடசம்)
11. சுப்ரம்மண்ய நாமார்ச்சனா மஞ்ஜரி நியாச சகிதம் 75.00
(ஸஹஸ்ரநாமம், த்ரிசதி, அஷ்டோத்தரசதம், ஷோடசம்)

### தமிழ் நூல்கள்

1. அருள் வழங்கும் மாரியம்மன் 125.00
2. இதுதான் இந்துமதம் 125.00
3. தார்மீகக் கோபங்கள் -சிறுகதைத் தொகுதி 250.00
4. கும்பாபிஷேக திரவியசூடாமணி (திருத்திய புதிய பதிப்பு)100.00
(கும்பாபிஷேகக்கிரியைகள் ஒவ்வொன்றிற்கும் தேவையான பொருட்களின் பட்டோலை)

### விரைவில் வெளிவரவுள்ள நூல்கள்

1. நித்ய பூஜா கிரியா மஞ்ஜரி – சம்ஸ்கிருதம் (கிரந்த எழுத்தில்)
2. கும்பாபிஷேக கிரியா மஞ்சரி – சம்ஸ்கிருதம் (கிரந்த எழுத்தில்)
5. லகு ஸ்ரீசக்ர பூஜா – சம்ஸ்கிருதம் (கிரந்த எழுத்தில்)
6. நவக்ரஹ ஹோமவிதானம் – சம்ஸ்கிருதம் (கிரந்த எழுத்தில்)
3. சைவாலயக் கிரியைகள் – தமிழ்
4. சைவ விரதங்களும் விழாக்களும் – தமிழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துன்பம் அகல.......

1. தோல் வியாதிகள் நீங்க – வெட்டிவேர் விசிறியால் விசிறி விபூதி அணிந்து பிட்டும் சர்க்கரைப் பானகமும் அம்பிகைக்கு நிவேதித்து ஏழைகட்கு விநியோகிக்கலாம்.

2. வெட்டுக்காயங்கள் ஆற – குறுவேர் விசிறியால் விசிறி, அம்பிகைக்குக் குங்குமார்ச்சனை செய்து சுண்டலும் நீர்மோரும் நிவேதனம் செய்து ஏழைகட்கு அளிக்கலாம்.

3. கால் நடைகளுக்கு நோய் நீங்க – பனையோலை விசிறியால் விசிறி அம்பிகைக்கு எலுமிச்சம்பழரசமும் எலுமிச்சம்பழச் சாதமும் நிவேதிக்கலாம்

4. விஷக்கடி சுகமாக – தென்னோலையால் விசிறி அம்பிகைக்குப் பாயசம் நிவேதிக்கலாம்.

5. வாத, பித்த நோய்களுக்கு – மயில்தோகை விசிறியால் விசிறி அம்பிகைக்கு வெள்ளரிக்காயும், முறுக்கும் நிவேதனம் செய்யலாம்.

6. அம்மை நோய்களின் வேகம் தணிய – சாமரம் வீசிச் சந்தனம் பூசி அம்பிகைக்குப் பலாச்சுளை நிவேதிக்கலாம்.

7. கலகங்கள் மனவேற்றுமைகள் நீங்க – கவரிமான் மயிர் சாமரத்தால் அன்னைக்கு வீசித் தயிர் அபிஷேகம் செய்து அவல் நிவேதனம் செய்யலாம்.

---

பிரபஞ்ச விஞ்ஞானம்

## ஜோதிஷ விஞ்ஞானம் பற்றி அறிந்துகொள்வோம்

விவிதவித்யா ஆரம்ப இதழ்களில் சோதிடசம்பந்தமான ஆரம்ப அறிவைப் பெறும்வகையில் சில கட்டுரைகள் வந்தமை வாசகர்கள் அறிந்ததே. அது தொடர்பாக மீண்டும் சில கட்டுரைகள் அடுத்தடுத்த இதழ்களில் எதிர்பார்க்கலாம். அதற்கிடையில் இவ்விதழல் சோதிடம் கற்போர் மனனம் செய்துவைக்கத்தக்க பாடல் ஒன்றைத் தருகிறோம்.

*.............தொடர்ச்சியை மறுபக்கத்தின் கீழ்ப்பகுதியில் காணலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## .........சப்த மாதர்கள்

சப்தமாதர் எனப் போற்றப்படும் ஏழு பெண்களும் யாவர்?

1. அபிராமி, (பிராமி) – தோலின் தலைவி – பிட்டும் சர்க்கரைப் பானகமும் பிரீதி

2. மாகேஸ்வரி – நிணத்தின் தலைவி – சுண்டலும், நீர்மோரும் பிரீதி

3. கௌமாரி – இரத்தத்தின் தலைவி – எலுமிச்சம்பழரசம், எலுமிச்சம்பழச் சாதம் பிரீதி

4. நாராயணி(வைஷ்ணவி) – சீழிற்குத் தலைவி – பாயாசம் பிரீதி

5. வாராகி – எலும்பின் தலைவி – வெள்ளரிக்காய், முறுக்கு பிரீதி

6. ருத்ராணி – சதையின் தலைவி – பலாச்சுளை பிரீதி

7. காளி – நரம்பின் தலைவி – தயிர் அபிஷேகம், அவல் நிவேதனம் பிரீதி

---

*..........முன்பக்கக் கீழ்ப்பகுதிக் கட்டுரையின் தொடர்ச்சி.*

இதில் உள்ள சிறப்பம்சம் என்னவென்றால் சோதிடப் பழம் பாடல் போலக் காணப்படும் இப்பாடல் உண்மையில் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான அன்பர் பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா அவர்களால் இயற்றப்பட்டது என்பதே.

அவர் இளம் வயதிலேயே இத்தகைய பாடலொன்றின்மூலம் சோதிட அறிஞரான தமது தந்தையாரை அசந்துபோகச் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாடல் எந்தெந்த ராசிகளில் எந்தெந்தக் கிரகம் உச்சம் கொண்டுள்ளன என்பதைத் தெரிவிக்கிறது.

மேடத்தில் கதிரோன் உச்சம் விளங்கிடு மீனம் தன்னில்
ஏடவிழ் புகரோன் கன்னிநற்புதன், மகரச் செவ்வாய்
ஆடகப் பொன்னன் நண்டில் அம்புலி இடபம் தன்னில்
கேடுசெய் சனியும் பாம்பும் கொண்டனர் துலாம், தேள் தன்னை.

**- நீர்வை பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா. (பிரான்ஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய நூல்களில்

ப.சிவானந்த சர்மா B.A.(Hons)

# இலக்கிய நயம்

சமயம், தத்துவம் சார்ந்த நூல்கள் பலவற்றை அதனோடு ஈடுபாடுள்ளவர்கள் மட்டுமே படிப்பார்கள். அவை சமய நூல்கள்தானே என்று பலர் அவற்றைப் புறக்கணித்து விடுவதுண்டு. சமயம் சார்ந்து அதனைப் படிக்கும் பலர்கூட அவற்றைப் பொருளுணர்ந்து ஆழமாகக் கவனிப்பதில்லை.

"சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரம்" என்று மணிவாசகர் கூறுவதற்கிணங்க, நாம் பயன்படுத்தும் பிரார்த்தனை நூல்கள், கிரியை நூல்கள் முதலியவற்றின் பொருளுணர்ந்து கற்றறிந்து பிரார்த்தித்தால் அதனால் ஏற்படும் பயன் பலமடங்கு பெருகுமல்லவா? மேலும் பொருள் தெரிந்து பயன்கொள்ளும்போது அதில் ஓர் ஈடுபாடு ஏற்பட வாய்புண்டு. அதுமட்டுமல்லாமல் நாம் பிரார்த்தனைக்கும் கிரியைகளுக்கும் பயன் படுத்துகின்ற பல நூல்களைப் பொறுமையாக அவதானித்தால் அவற்றில் இருக்கும் இலக்கிய நயங்கள் பலவற்றைச் சுவைக்க முடியும்.

அழகிய வர்ணனைகள், அற்புதமான சொல்லாட்சிகள் உவமை, உருவக அணிச்சிறப்புக்கள், நகைச்சுவை முதலிய பல்வேறு சிறப்புக்கள் ஆங்காங்கே மிளிரக்காணலாம். தேவார திருவாசகம் முதலிய தமிழ் நூல்களும் அர்ச்சனை, தோத்திரம் முதலிய வடமொழிப் பிரார்த்தனை நூல்களும் ஏன், கிரியா பத்ததிகளில் கூட இத்தகைய சுவைகளைக் காணமுடியும்.

அவ்வகையில் சில சம்ஸ்கிருத நூல்களின் இலக்கிய நயம் இப்பகுதியில் தொடர்ந்து எழுதப்படும். இங்கே லலிதா த்ரிசதியின் இலக்கிய நயம் சுவைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I. ஸ்ரீ லலிதா த்ரிசதி

ஸ்ரீவித்யா உபாசனையில் - சக்திவழிபாட்டில் ஈடுபடுவோரின் முக்கியமான ஒரு பிரார்த்தனைநூல் ஸ்ரீ லலிதா த்ரிசதி ஆகும். இது பிரமாண்ட புராணத்தில் இடம்பெறுவது. அம்பிகையைத் துதிக்கும் அழகிய முந்நூறு நாமங்களைக் கொண்டது இந்நூல்.

யஜுர் வேதகாலத்தில் - சதருத்திரியத்தில் முளைகொண்ட நாமார்ச்சனை வழிபாடு இன்றுவரை வளர்ந்து வருகிறது. பெருந்தெய்வமாக விஸ்வரூபமெடுக்கும் சிறு தெய்வங்களுக்கும் மனித தெய்வங்களுக்கும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் மனித தெய்வங்களுக்கும்கூட நாமார்ச்சனைகள் புதிதுபுதிதாக இயற்றப்பட்டு வருகின்றன. ஆனால் புராதனமான பழைய அர்ச்சனை நாமங்கள் சிவ - சக்தி சம்வாதமாக அல்லது முனிவர்களால் வெளிப்படுத்தப் பட்டவையாக இருப்பதால் அவை அபரிமிதமான சக்திவாய்ந்த மந்திரங்களாகப் போற்றப்படுகின்றன.

மேலும், இந்த நாமங்கள் அநுஷ்டுப் சுலோக வடிவில் அமைக்கப்பட்டிருக்கும். பிற்காலத்து நாமங்கள் இவ்வாறு ஸ்லோக வடிவில் கோவைப்படுத்த முடியாமலிருக்கும். லலிதா த்ரிசதியானது அம்பிகையின் பஞ்சதசாக்ஷரீ எனப்படும் பதினைந்தெழுத்து மந்திரத்தின் ஒவ்வோரெழுத்துக்கும் 20 நாமங்கள் வீதமாக அர்த்த ஒழுங்கில் அமைக்கப்பட்டிருப்பதும் ஒரு சிறப்பாகும்.

பொதுவாக நாமங்கள் யாவும் கடவுளரின் தோற்றப் பொலிவை வர்ணிப்பவையாகவும், அருட்திறம், போர்த்திறன் ஆகியவற்றைப் புகழ்ந்துரைப்பதாகவும் புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கும். லலிதா த்ரிசதியின் நாமங்களும் அத்தகைய இயல்புகளைக் கொண்டிருக்கும் அதேநேரத்தில் அழகிய சொல்லாட்சியும் அணிநயமும் விரவிநிற்பதையும் கண்டு அனுபவிக்கமுடிகிறது. லலிதா த்ரிசதி நாமங்களில் உருவகச் சிறப்பு மேலோங்கி நிற்கக் காணலாம்.

கல்யான குணங்கள் நிறைந்தவளாகவும் (கூ௵ஷாணி 2) கலிதோஷத்தைப் போக்குபவளாகவும் (கூஞிஷொஷ ஹாா 15) விரும்பிய பலன்களைக் கொடுப்பவளாகவும் (ஶுஂஶிகூாஜஷே ஷிஜிஊா 47, கூாஜிதாயூஊா 144, ஶுஂஷிதாயூ ஷூஊாயிநீ 43)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றப்பட்டு தாமரைக்கண்களுடையவளாயும் (கஊலாக்ஷீ 7, கஊ லொஞ நா 16) சிறிது புன்னகைக்கும் முகமுடையவளாயும் (ஶுஷை ஹிதாநநா 60) எல்லா அங்கங்களும் அழகான வடிவாம்பிகையாகவும் (ஸவாருண ஸுந்தரீ 130) வர்ணிக்கப்பட்டுப் போற்றப்படுகிறாள். இவற்றில் கவியழகைக் கண்டு ரசிக்கலாம்.

ஹ்ரீங்கார மந்த்ரம் அம்பிகைக்கு மிகமுக்கியமானது எனவே அதனை வைத்தே பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஹ்ரீங்கார சந்திரனின் நிலவு(ஹ்ரீங்கார ஶஶி சந்த்ரிகா 206) ஹ்ரீங்காரமாகிய சூரியனின் கிரணம் (ஹ்ரீங்கார ஹாஸ்கர ரூசி 207) ஹ்ரீங்காரக் கிழங்கின் முளை (ஹ்ரீங்கார கந்தாங்குரிகா 209) ஹ்ரீங்காரப் பூங்காவில் உலவும் மயில் (ஹ்ரீங்கார உத்யாந கேகிநீ 212) ஹ்ரீங்காரக் காட்டில் உலவும் மான் (ஹ்ரீங்கார அரண்ய ஹரிணீ 213) ஹ்ரீங்காரப் பாத்தியில் விளங்கும் கொடி (ஹ்ரீங்கார ஆவால வல்லரீ 214) ஹ்ரீங்காரக் கூட்டில் இருக்கும் கிளி (ஹ்ரீங்கார பஞ்ஜர ஶுகீ 215) ஹ்ரீங்கார முற்றத்தின் ஒளி விளக்கு (ஹ்ரீங்கார அங்கண தீபிகா 216) ஹ்ரீங்காரத் தாமரையின் வண்டு (ஹ்ரீங்கார அம்போஜ ப்ருங்கிகா 218) ஹ்ரீங்கார மரத்தின் பூக்கொத்து (ஹ்ரீங்கார தரு மஞ்ஜரீ 220) என்னும் உருவகங்கள் சுவைத்து மகிழத்தக்கன.

"கறைக்கண்டனுக்கு மூத்தவள்", "விரிசடையோன் புல்லிய மென் முலையாள்" (91), "இடப்பாகம் சிறந்தவள்" (88) என்றெல்லாம் சிவனுக்கும் அம்பிகைக்குமுள்ள தொடர்பை அபிராமிப்பட்டர் பலபட வர்ணிப்பதுபோல இங்கும் காமேஸ்வரனால் ஆலிங்கனம் செய்யப்படுபவள் (காமேஶ்வராலிங்கிதாங்கீ 246), காமேஸ்வரனது மடியில் வீற்றிருப்பவள் (காமேஶோத்ஸங்க வாஸிநீ 245), காமேஸ்வரனுக்குச் சுகத்தைக் கொடுப்பவள் (காமேஶ்வர ஸுகப்ரதா 247), காமேஸ்வரனுக்கு மனமகிழ்வைக் கொடுப்பவள் (காமேஶ்வர ப்ரேமரத்ந 243), காமேஸ்வரனுக்குப் பிராணநாடியாக உள்ளவள் (காமேஶ்வர ப்ராண நாடீ 244), காமேஸ்வரனது தவத்தின் பலன் (காமேஶ்வர தப:ஸித்தி 250), காமேஸ்வரனது இல்லத்தலைவி (காமேஶ்வர க்ருஹேஶ்வரீ 255) என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிறது.

இத்தகை இன்னும் சில அழகிய நாமங்கள் வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(283) ஹ்ரீங்காரப் பாற்கடலின் அமிர்தம் ஹ்ரீங்கார துக்தாப்தி ஸுதா

(284) ஹ்ரீங்காரத் தாமரையின் இந்திரை ஹ்ரீங்கார கமலேந்திரா

(286) ஹ்ரீங்கார மரநிழல் ஹ்ரீங்கார தரு ஶாரிகா

(287) ஹ்ரீங்கார பெட்டியின் மணி ஹ்ரீங்கார பேடக மணி

(290) ஹ்ரீங்கார ஆஸ்தான நர்த்தகி ஹ்ரீங்கார ஆஸ்தான நர்த்தகீ

இவ்வாறு லலிதாத்ரிசதியின் பொருளுணர்ந்து அங்கு காணப்படும் இலக்கிய நயங்களைச் சுவைக்கும்போது பக்தியுடன் கூடிய இன்ப அனுபவமும் கிட்டுகிறதல்லவா?

**அடுத்த இதழில் ---**

**சுப்பிரமண்ய த்ரிசதியின் இலக்கிய நயம்.**

# அறுகம்புல்லின் மகிமை

பிள்ளையார் வழிபாட்டில் அறுகம்புல் முக்கிய இடம் பிடித்துள்ளமை நாம் அனைவரும் அறிந்த உண்மை. உலகில் உள்ள மூலிகைகளில் மிகச்சிறந்தவற்றில் அறுகம்புல்லும் ஒன்று.

முன்பொருமுறை அனலாசுரன் தேவர்களுக்குக் கொடுமை செய்து வந்தான். அவர்கள் சென்று விநாயகரிடம் முறையிட்டார்கள். உடனே அவனுடன் யுத்தம் செய்து அவனை விநாயகர் விழுங்கி அருளினார். அந்த உஷ்ணத்தை தாங்க விநாயகர் கஷ்டமடைந்தார். தேவர்கள் எல்லாவிதமான கிரியைகள் செய்தும் தணியவில்லை. ஓர் முனிவர் அறுகம்புல்லை எடுத்து சாத்தினார். உடனே விநாயகர் உஷ்ணத்தில் இருந்து நீங்கினார் என விநாயகர் புராணம் கூறுகின்றது.

அறுகம்புல் வாதபித்த ஐயமோ டினை
சிறுக வறுக்க மின்னுஞ் - செப்பி அறிவுதருங்
கண்ணோ யொடு தலைநோய் கண்புகை யிரத்தமித்த
முன்னோ மொழிக்கு முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயம் தெளி அரங்கு

## அர்ச்னையின்போது வாத்யம் அவசியமா?

**? ஆலயங்களில் அர்ச்சனை நிகழும்போது மணி அடிப்பது மற்றும் வாத்தியங்கள் வாசிப்பது பொருத்தமானதா?**

! அர்ச்சனை நிகழும்போது மணி முதலிய வாத்தியங்கள் யாவும் நிறுத்தப்படுவதே முறை. ஆனால் "அர்ச்சனை பாட்டேயாகும்" என்ற தமிழ்மறை வாக்கிற்கிணங்க அர்ச்சனை நிகழும்போது அதற்கு இசைவாக நாதஸ்வரத்தில் ராக ஆலாபனை வாசிப்பது மிகப் பொருத்தமானது.

## வைரவர் பூஜை முதலிலா, பிறகா?

**? உற்சவ காலங்களில் திருவீதி உலா முடிந்தபின்னர் வைரவர் பூஜை நிகழ்வது சரியானதா? அல்லது முதலிலேயே அதனை நிறைவேற்றலாமா?**

! நிர்வாக நடைமுறை வசதிகளுக்காக பல ஆலயங்களில் முதலிலேயே வைரவர் பூஜை செய்யப்படுகிறது. அதற்கு ஒரு சமாதானமும் உண்டு. விசேட விழாவாக மேலதிக செயற்பாடான திரு உலாவிற்கு முன்னர் வழமையான வைரவர் பூஜை நிறைவேறுவது பொருத்தமானது என்பதே அந்த விளக்கம். ஆனால், உண்மையில் திரு உலா முடிந்தபின்னரே வைரவர் பூஜை நிகழவேண்டும்.

## சூரன் போருக்கு சக்திகள் ஏன்?

**? சூரசம்ஹாரத்திற்கு முருகன் சக்திகளுடன் செல்லலாமா?**

! இல்லை. தனியாக முருகன் செல்வதே முறை.

## ஊஞ்சல் எப்போது?

? உற்சவ காலத்தில் ஊஞ்சல் நாளில் சுவாமி வீதி உலா வந்தபின்னர்தான் ஊஞ்சல் செய்யவேண்டுமா?

! இல்லை. முதலில் வசந்த மண்டப பூஜையின்போதே ஊஞ்சல் நடைபெற்று அதன்பின் வீதி உலா வருவதே முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சனை செய்யலாமா?

**? அர்த்தஜாமப் பூஜையின் பின்னரும் சண்டேஸ்வரர் பூஜையின் பின்னரும் அர்ச்சனை செய்யலாமா?**

! பொதுவாக எக்காலப் பூஜையிலும் சண்டேஸ்வரர் பூஜையின்பின் அர்ச்சனை செய்வதற்கு இடமில்லை. ஆனால் அதிக பக்தர்கள் வருகின்ற பெரிய ஆலயங்களில் அடுத்தடுத்த காலப் பூஜைகள் தொடர்ந்து நிகழவிருப்பதால் திருக்கதவம் சாத்தாமல் திறந்தே இருக்கின்ற காரணத்தைக் காட்டி இக்காலத்தில் பல ஆலயங்களில் சண்டேஸ்வர பூஜையின் பின்னரும் அர்ச்சனை நடைபெறுகின்றது. தவிர்க்கமுடியாத நிலையில் அவர்கள் அவ்வாறு செய்தாலும் அது சாஸ்திரோக்தமன்று. அர்த்தஜாமப் பூஜையில் சண்டேஸ்வரபூஜை முடிந்தபின் அர்ச்சனை செய்யவே கூடாது.

## நிறைகுடம் சரிக்கலாமா?

**? சுவாமி திரு உலா வரும் வேளைகளில் நிறைகுடத்தினை சுவாமிக்குமுன் பூமியில் சொரிகின்றனரே, இது சரியா?**

! மிகத்தவறான இந்தச் செயல் பரவலாக நம்மிடையே நாளாந்தம் செய்யப்படுகிறது. அறியாமையும் சரியானதை வலியுறுத்தி அறிவுறுத்த ஆட்கள் இல்லாமையும்தான் இதற்குக் காரணம்.

நிறைகுடம் என்பது நிறைவானது. மங்கலப் பொருட்களை உடனே கலைப்பது எந்த நல்லகாரியத்திலும் செய்யப்படுவதில்லை. நிறைகுடம், கும்பம், பாததீர்த்தம் என்பவற்றின் வேறுபாடுகளை நம்மவர்கள் அறியவேண்டும். மங்கலமாக வைக்கப்பட்ட நிறைவான நிறைகுடத்தின் புனிதநீரைக் கீழே கொட்டிக் கால்களால் மிதிக்கலாமா?

இறைவனுக்குப் பாததீர்த்தம் வழங்குகிறோம் எனச் சிலர் அதற்கு விளக்கம் கூறுகின்றனர். அவ்வாறாயின் இரண்டு ஐயங்கள் எழுகின்றன. பாததீர்த்தம் யாரும் வழங்கலாமா? அதற்கு அதிகாரமுடையவர் குருவே. அடுத்தது, எப்போது பாததீர்த்தம் வழங்கவேண்டும்? ஒருவர் எமது இடத்திற்கு வரும்போதுதான் பாத தீர்த்தம் வழங்கி வரவேற்கவேண்டும். இறைவன் வீதிஉலா முடித்து ஆலயம் திரும்பும்போது குரு பாததீர்த்தம் வழங்கி வரவேற்கிறார். அப்படியிருக்க உங்கள் இல்லத்திற்கு எழுந்தருளிய ஆண்டவனுக்கு நிறைகுடம் வைத்து வரவேற்று நிவேதனம் செய்து அர்ச்சனை செய்தபிறகு பாததீர்த்தம் வழங்கி வழியனுப்பி வைப்பதா?

எனவே நிறைகுடத்து நீரை அப்படியே வைத்திருந்து பின்னர் கால்படாத இடங்களில் ஊற்றுவதே முறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி அஞ்சலி

கேள்வி: – இவ்வுலகை விட்டு மறைந்து விட்டவர்களின் நினைவு குறித்து வெளியிடப்படும் விளம்பரங்களை நினைவாஞ்சலி என்ற தலைப்பில் வெளியிடுகிறார்கள் இது சரிதானா? தமிழ்நாட்டிலும் இங்கு வெளியாகும் மற்ற தினசரிப் பத்திரிகைகளிலும் நினைவஞ்சலி என்ற தலைப்பைத்தானே போடுகிறார்கள். புஷ்பம் + அஞ்சலி = புஷ்பாஞ்சலி. நினைவு + ஆலயம் = நினை வாலயம் என்பவை சரிதான் ஆனால் நினைவு + அஞ்சலி = நினைவஞ்சலி என்பதுதான் சரியானது என்று நான் கருதுகிறேன்.

பதில்: – சர்வ + அதிகாரி, சர்வாதிகாரி என்றும் அமிர்த + அஞ்சனம் = அமிர்தாஞ்சனம் என்று கூறப்படுவது போல நினைவு + அஞ்சலி நினைவாஞ்சலி என்று கூறப்படுகிறது. வடமொழிச் சொற்களுக்குக் கூறப்படும் தீர்க்க சந்தி, குணசந்தி, விருத்தி சந்தி என்னும் மூன்று சந்திகளுள் மேலே கண்ட சொற்கள் தீர்க்க சந்தி இலக்கணத்திற்கு உட்பட்டவை. இரு வட சொற்களுக்குத் தானே யன்றி தமிழ் வட சொல் புணர்ச்சிக்கு இந்த வடமொழிச் சந்தி இலக்கணம் பொருந்தாது. நினைவு என்பது தமிழ்ச் சொல். அஞ்சலி என்பது வட சொல். நினைவு என்பதை வடசொல்லாக்கி நினைவாஞ்சலி எனக் கூறப்பட்டு வருகிறது. நினைவு தமிழ்ச் சொல். ஆகவே தாங்கள் கூறுவது போல் நினைவஞ்சலி என்பதே சரி.

பாலாபிஷேகம் என்பது தவறு. பாலபிஷேகம் என்பதுதான் சரி எனத் தமிழறிஞர் அ. கி. பரந்தாமனார் குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

மு. காந்தி, பங்சார் பாரு,
கோலாலம்பூர்.

இத் தகவலை மலேஷியப் பத்திரிகை ஒன்றில் சுவைத்து மலேஷியாவிலிருந்து நமக்கு அனுப்பியவர் மட்டுவில், சிக்ஷா நிபுண சம்ஸ்கிருத பண்டிதர் சிவஸ்ரீ கி. சதாசிவக் குருக்கள் அவர்கள்.

---

**என்னிதயம் வணங்கும் சான்றோர்கள்**

இவ்விரு பகுதிகளும்
வழமைபோல் அடுத்த இதழில்
தொடரும்.

**புகழ்பூக்க பூசுரர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழகத்துச் சைவசித்தாந்த அறிஞர் ஸ்ரீ க. கார்த்திகேயசிவம்

அவர்களுடன்

# ஒரு சந்திப்பு

இருபத்தைந்தே வயதான துடிப்பான இளைஞர் காரத்திகேயன். தமிழகத்தின் மானாமதுரை காஸ்யப கோத்திரம் தி. தக்ஷிணாமூர்த்தி பட்டர் அவர்களின் தௌஹித்திரன். கங்காதர பட்டரின் புதல்வர்.

தொழில்நிமித்தம் தற்போது மலேஷியாவில் தங்கியிருப்பினும் அவருடைய சிந்தனை, செயல் யாவும் தமிழகத்திலுள்ள அகோர சிவாச்சாரியார் அறக்கட்டளை தொடர்பாகவே இருக்கின்றன. அதன் செயலாளராக இருக்கும் கார்த்திகேய சிவம் அவர்கள் சைவ சித்தாந்தத்தின் மூல வேர்களைத் துருவி ஆராயும் ஆய்வாளராக இருக்கிறார்.

சைவ சித்தாந்த உண்மைகளை வெளிப்படுத்தி நிலைநிறுத்தி, துறைசார் அறிஞர்கள் சிலரையாவது உருவாக்குதல் இவர்களது தலையாய நோக்கமாக உள்ளது.

தமிழகத்தைவிட யாழ்ப்பாணத்தில் சைவ சித்தாந்த ஈடுபாடு அதிகமாக இருப்பதை அறிந்து அதற்காகவே யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இவ்விளைஞர் நமது அச்சுவேலிக் குருக்களிடம் (சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள்) அபார பக்தி பூண்டவராக இருப்பதறிந்து மெய்சிலிர்த்தோம். நமது குருக்கள் அவர்களுக்குத் தமிழ்நாட்டில் இவ்வளவு மதிப்பு இருப்பதறிந்து மகிழ்ச்சியடைந்தோம்.

இங்கு வந்தபொழுது ஆவலுடன் அச்சுவேலிக்குச் சென்று குருக்கள் அவர்களது இல்லத்தைப் பார்வையிட்டு அவரது பேரனார் சிவஸ்ரீ வை. விருத்தகிரீஸ்வரக் குருக்களுடன் உரையாடி மகிழ்ந்தார்.

அச்சுவேலிக் குருக்கள் அவர்களால் வெளியிடப்பட்ட சைவ சித்தாந்த நூல்கள் அத்தனையும் தமக்கு வேண்டும் என்று இப்போது எங்கும் கிடைக்காத அந் நூல்களை நமது சர்வானந்தமய பீடத்தின் நூலகத்திலிருந்து போட்டோஸ்ரட் பிரதிகளாக சேகரித்துச் சென்றிருக்கிறார்.



**ஸ்ரீ கார்த்திகேய சிவம் அவர்கள் சர்வானந்தமயபீட நூலகத்தைப் பார்வையிடுகிறார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகத் திருமுறைகளிலும் சைவ சித்தாந்த சாஸ்திரங்களிலும் சொல்லப்படும் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டே சைவ சித்தாந்த ஆராய்ச்சிகள் இன்று நடைபெறுகின்றன. ஆனால் அவற்றுக்கும் முந்திய மூலவேர்கள் சிவாகமங்களிலும் அதனை அடுத்துவந்த ஆகம வழிநூல்களாகிய பல வடமொழி நூல்களிலும் நிறைவாகவும் மறைவாகவும் பொதிந்துள்ளன எனக் கூறும் இவ்வன்பர் அவற்றை ஆராய்ந்து வெளிக்கொணர்வதையே தமது நோக்கமாகக் கொண்டிருக்கிறார்.

காஞ்சீபுரம் ஸ்ரீ பஞ்சாக்கர யோகிகள் அருளிச்செய்த **சைவ பூஷணம்** கிரந்த மற்றும் நாகர மொழி மூலத்துடனும் தமிழ் வியாக்கியானத்துடனும் சென்னை ஸ்ரீ அகோர சிவாச்சாரியார் அறக்கட்டளைமூலம் இந்த ஆண்டு ஆரம்பத்தில் வெளியிடப் பட்டுள்ளது. இது ஓர் அரிய முயற்சியாகும்.

''கண்களால் காண முடியாதனவும் அறிவினால் உணர முடியாதனவுமாக உள்ள பல விடயங்களை நமக்குத் தெரிவிக்க எழுந்தவையே சாஸ்திரங்கள். அவற்றை நாளாந்த வாழ்வுக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பதை நாம்தான் சிந்திக்க வேண்டும். நாளாந்த வாழ்வில் நமக்குள்ள சிக்கல்கள் எவை? அவற்றைத் தீர்க்கச் சைவ சித்தாந்தம் எவ்வாறு உதவும் என ஆராய்வதே நமது இன்றைய தேவை'' எனக் கூறும் ஸ்ரீ கார்த்திகேய சிவம் அவர்கள் ''சாஸ்திரங்களில் உள்ளவற்றை நன்கு கண்டறிந்து நாம் பயன்படுத்தாவிட்டால் சாஸ்திரங்களால் நமக்கு என்ன பிரயோஜனம்?'' என்ற ஒரு கேள்வியுடன் நமக்கு நல்ல ஒரு நீதி சுலோகத்தைக் கூறி நம்மிடம் இருந்து பிரியாவிடை பெற்றார். தொடர்ந்து கடல் கடந்த அன்பராக, விவிதவித்யா ஆதரவாளராக இருந்துவருகிறார். (விவிதவித்யா 9ம் இதழில் அவரது கட்டுரை ஒன்று பிரசுரமாகியிருந்தது)

கண்களே இல்லாதவனுக்குக் கண்ணாடியால் என்ன பிரயோஜனம்? அதுபோல, சுய அறிவு இல்லாத ஒருவனுக்கு சாஸ்திரங்களினால் என்ன பிரயோஜனம்? -- நீதி சுலோகம்.

𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌕𑌿𑌂।
𑌲𑍋𑌚𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌹𑍀𑌨𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌪𑌣𑌃 𑌕𑌿𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

यस्य नास्ति स्वयं प्रज्ञा शास्त्रं तस्य करोति किम्।
लोचनाभ्यां विहीनस्य दर्पण: किं करिष्यति ।।



**விவிதவித்யா ஆசிரியருடன் சந்திப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி அக்ஷராத்மானந்தாஜி அவர்கள் பாரதத்தில் ராஜமுந்திரி ராமகிருஷ்ண மடத்தில் இருக்கின்றார். விவித வித்யாவின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்ட அவர்கள் அண்மையில் நமக்கு e-mail மூலம் அனுப்பிவைத்த ஓர் ஆங்கில நற்போதனைக் கதையை இங்கு தருவதில் மகிழ்ச்சியடைகிறோம். இதன் மொழிபெயர்ப்பும் அடுத்து இடம்பெறுகிறது.



# THE CRACKED POT

Once upon a time there was a water bearer in India who had two large pots, each hung on each end of a pole which he carried across his neck. One of the pots had a crack in it, and while the other pot was perfect and always delivered a full portion of water at the end of the long walk from the stream to the master's house, the cracked pot arrived only half full. For a full two years this went on daily, with the bearer delivering only one and a half pot full of water in his master's house. Of course, the perfect pot was proud of its accomp-lishments, perfect to the end for which it was made. But' the poor cracked pot was ashamed of its own imperfection, and miserable that it was able to accomplish only half of what it had been made to do. After two years of what it perceived to be a bitter failure, it spoke to the water bearer one day by the stream. " I am ashamed of myself, and I want to apologize to you." "Why?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

asked the bearer? "What are you ashamed of?" "I have been able, for these past two years, to deliver only half my load because this crack in my side causes water to leak out all the way back to your master's house. Because of my flaws, you have to do all of this work and you don't get full value from your efforts," the pot said. The water bearer felt sorry for the old cracked pot, and in his compassion he said, "As we return to the master's house, I want you to notice the beautiful flowers along the path." Indeed, as they went up the hill, the old cracked pot took notice of the sun warming the beautiful wild flowers on the side of the path, and this cheered it some. But at the end of the trail, it still felt bad because it had leaked out half its load, and so again it apologized to the bearer for its failure. The bearer said to the pot, "Did you notice that there were flowers only on your side of the path, but not on the other pot's side? That's because I have always known about your flaw, and I took advantage of it. I planted flower seeds on your side of the path, and every day while we walk back from the stream, you've watered them. For two years I have been able to pick these beautiful flowers to decorate my master's table. Without you being just the way you are, he would not have this beauty to grace his house."

Each of us has our own unique flaw. But it's the cracks and flaws we each have that make our lives together so very interesting and rewarding. You've just got to take each person for what they are and look for the good in them.

EAST AND WEST SERIES. 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜியின் கதை

# வெடித்த குடத்தின் துயரம்

முன்னொரு காலத்திலே ஒரு தொழிலாளி இருந்தான். அவன் தன்னுடைய எசமானனுக்காக நீண்ட தொலைவிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து கொடுப்பது வழக்கம்.

அவனிடம் இரு குடங்கள் இருந்தன. அவன் ஒரு கயிற்றின் இரு முனைகளிலும் அவ்விரு குடங்களையும் கட்டி அவ்விரு குடங்களிலும் நீரை நிரப்பியபின் அதனைத் தன் கழுத்தில் தொங்கவிட்டுக்கொண்டு வீட்டிற்கு வருவான்.

அவனது இரு குடங்களில் ஒன்று சிறிய வெடிப்பைக் கொண்டிருந்தது. நீரை நிரப்பிக்கொண்டு ஆற்றிலிருந்து வீடுவரையான நீண்ட தூரத்திற்கு அவன் வந்து சேர்வதற்கிடையில் அந்த வெடித்த குடத்திலிருந்து அரைவாசி நீர் வெளியே சிந்திவிடும். ஒன்றரைக் குடம் நீரைத்தான் அவனால் எசமானுக்குக் கொடுக்கமுடிந்தது.

இவ்வாறு இரண்டு வருட காலங்களுக்கு நடைபெற்று வந்தது. முழுமையான குடம் தன்னைப்பற்றி மிகவும் பெருமைப்பட்டது. ஆனால் உடைந்த குடம் தனது குறைபாட்டைப்பற்றி மிகவும் வேதனைப்பட்டுவந்தது.

கடைசியில் பொறுமையிழந்த அந்தக் குடம் அந்தத் தொழிலாளியிடம் தன் வேதனையை ஒருநாள் ஆற்றங்கரையில் இருக்கும்போது வெளியிட்டது. "நாம் திரும்பிச் செல்லும்போது உனக்கு அழகிய மலர்கள் பலவற்றைக் காட்டுகிறேன்" என்று கூறிய தொழிலாளி அவ்வாறே வீடு திரும்பும்போது நீண்ட அந்தப் பாதையின் ஒருகரையில் மட்டும் பூத்துக் குலுங்கிய அழகிய மலர்ச் செடிகளை அதன் கவனத்திற்குக் கொண்டுவந்தான்.


" நான் இந்தப் பாதையின் அருகே விதைகளை விதைத்தேன் தினமும் நீதான் அவற்றுக்கு நீர் பாய்ச்சினாய். அதனால்தான் இத்தனை மலர்கள் மலர்கின்றன. தினமும் நான் போகும்போது மலர்களைப் பறித்துக்கொண்டுபோய் எசமானின் மேசையை அலங்கரிக்கின்றேன்" என்று கூறினான்.

இப்போது அந்தக் குடம் தனக்குள் திருப்தியடைந்தது.

**யாரிடம்தான் குறைகள் இல்லை. நன்கு கவனித்தால் அந்தக் குறைகளே நிறைவாகிவிடும். அதற்கேற்ற வல்லமையையும் மனப்பாங்கினையும் நாம்தான் வளர்த்துக்கொள்ள வேண்டும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிமண்டபம்



சம்பிரதாயபூர்வமான பல சடங்குகளைக் கொண்டது நமது இந்துப் பண்பாட்டு வாழ்க்கை. கிரியைகளுடன் இவை இணைந்துள்ளன. காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம் இவற்றில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. *மதாநு மதிகொ ௌ௵ா கூ ஃ* என்பதற்கிணங்க முன்சென்றவர்களைப் பின்பற்றிச்செல்வது மனித இயல்பு. குருபதேச மார்க்கம், தேசாசாரம் என்றவகையிலே சில காரியங்கள் இறுக்கமாகக் கைக்கொள்ளப் படுகின்றன. காலத்துக்கேற்றவகையில் நவீனமயப்படுத்தப்பட்டுக் கவர்ச்சியாக நடத்தப்படுகின்றன சில கிரியைகள்.

இவற்றைப் பார்ப்பவர்களுக்கும் இவற்றில் ஈடுபடுபவர்களுக்கும் எது சரி, எது பிழை என்ற ஐயம் எழுவது இயல்பு. பட்டிமண்டபம் பகுதியில் இத்தகைய சில பிரச்சினைகள் அவ்வப்போது முன்வைக்கப்படும். அறிஞர்கள் பலரும் தகுந்த ஆதாரம் காட்டி அவற்றுக்கு விளக்கம் எழுதி விவாதிக்கும்போது நமக்கு ஒரு தெளிவு கிடைக்கலாம். நாம் பல புது விடயங்களை அறிந்துகொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கிறது.

வாசர்கள் அறிஞர்கள் யாவரும் இவைபற்றித் தமது கருத்துக்களை எழுதலாம். இங்கு ஒரு நேயரின் கருத்து பிரசுரமாகிறது.

பிராமண குலத்தவர்கள் தமது பெயருக்குமுன் **பிரம்மஸ்ரீ** என்று போடுவது நீண்டகால வழக்கம். ஆசார்யாபிஷேகம் பெற்றவர்கள் தமது பெயருக்குமுன் **சிவஸ்ரீ** என்ற பதத்தைப் போட்டுவருகிறார்கள். முதலாவது பதம் அவர்கள் அந்தணர்கள் என்பதைத் தெரிவிக்கிறது. பின்னைய பதம் அவர்கள் குருப்பட்டம் பெற்றவர்கள் என்பதைத் தெரிவிக்கிறது.

ஆனால், அந்தணரல்லாதவர்களும் ஆசார்யாபிஷேகம் பெறமுடியும் என்பதனால் அவர்களும் சிவஸ்ரீ எனப் பயன்படுத்துகிறார்கள். எனவே, ஒருவர் தமது பெயருக்குமுன் சிவஸ்ரீ எனப் போடும்போது அவர் அந்தணரா அல்லரா எனத் தெரிந்துகொள்ள முடிவதில்லை. இயல்பாகவே அந்தணர்களுக்குரிய பிரம்மஸ்ரீயை நீக்குவது பொருத்தமில்லை. எனவே *பிரம்ம சிவஸ்ரீ* என்பதுபோல ஏதாவதொரு பிரத்தியேகமான சொற்பதத்தைப் பயன்படுத்தலாமல்லவா?

**பிரம்மஸ்ரீ கு. குருசாமி ஐயர்**
**75, எல்லை வீதி, மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாட்டிமண்டபம்

சம்பிரதாயபூர்வமான சடங்குகளில்தான் நமது பண்பாடும் கலாசாரமும் தங்கியுள்ளன. விரைவான காலஓட்டத்தில் நமது பழைய சங்கதிகள் பலவற்றை நாம் மறந்துவருகிறோம். அவை மறைந்தும் வருகின்றன. பழையவை பல, புதியவர்களுக்குத் தெரியாம லிருக்கின்றன. அதனாலும் அவை கைவிடப்படுகின்றன.

அமாவாசை நாளில் கோலம் போடக்கூடாது. ஒற்றை ஆடையுடன் மங்கல நிகழ்வில் கலந்துகொள்ளலாகாது.உணவு உண்ணும்போது வாழையிலையின் நுனிப்பக்கம் இடதுபுறம் இருக்கவேண்டும்.... இவைபோன்ற பல சின்னச் சின்ன விஷயங்கள் வயதான நம் பெரியோர்களிடம் கேட்டறிந்து அவற்றின் உண்மையான அர்த்தங்களையும் காரணங்களையும் புரிந்துகொண்டு புனிதத்தன்மையுடன் பேணப்படவேண்டியவை.

இத்தகைய விஷயங்கள் பெரும்பாலும் பெண்களால்தான் பேணப்படுகின்றன. ஆபஸ்தம்பரும், "ஸ்திரீகளிடமிருந்தும் நாலாம் வருணத்தவர்களிடமிருந்தும்கூடக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டியவை அநேகம் இருக்கின்றன." என்று கூறுகிறார்.(ஆபஸ்தம்ப சூத்திரம்)

அதனால்தான் இப்பகுதிக்குப் பாட்டிமண்டபம் என்று தலைப்பிட்டிருக்கிறோம். இப்பகுதியில் பிரசுரிப்பதற்குகந்த விஷயங்களையும் வாசகர்களிடமிருந்து ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறோம்.

## உணவை உண்பதில் கூட விதிமுறைகள்.

உண்பவர் வந்து அமர்ந்தபின்னரே இலையில் உணவு பரிமாறவேண்டும். குறைந்தபட்சம் கறிகள் பரிமாறினாலும் சாதம் பரிமாறுமுன் உண்பவரை அமரச்செய்யவேண்டும்.

இலையில் முதலில் பாயசம் முதலிய இனிய பண்டங்கள் பரிமாறியபின் கறிவகைகள் பொரியல் முதலியன பரிமாறி அதன்பின்னரே சாதம் பரிமாறவேண்டும்.

சாதத்தில் நெய் விடவேண்டுமேயல்லாமல் பருப்பின்மேல் நெய்விடக்கூடாது. ப்ராணாஹுதி செய்யும்போது உப்பு இருக்கக்கூடாது. நெய் சேர்த்த சாதம் மட்டுமே இருக்கவேண்டும்.

இவைபோன்ற இன்னும் சில விதிமுறைகளை அடுத்த இதழில் தருகிறார் ***மயிலணி சிவஸ்ரீ சோ. ரஜதகிரீசக் குருக்கள்*** அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத சிவாகம அறிவுப் போட்டி

**பரிசுத் தொகை ரூபா 3,000/=**

விவிதவித்யா 9ம் இதழில் பிரசுரமான வேத சிவாகம அறிவுப்போட்டி இல. 2 இன் முடிவுகள் இங்கு தரப்படுகின்றன. இப்போட்டியில் பங்குபற்றிய யாரும் முற்றிலும் சரியான விடை அனுப்பவில்லை. எனவே பரிசு யாருக்கும் வழங்கப்படவில்லை.

மேலும், இப்போட்டிக்கான பரிசுத்தொகையைத் தாம் மனமுவந்து வழங்குவதாகவும் அப்பரிசுத்தொகையை ரூபா 3,000/= ஆக உயர்த்தும்படியும் கொழும்பு கிராண்ட்பாஸ் ஞானவைரவ சுவாமி தேவஸ்தானம், சாமமன்ய சிவஸ்ரீ பால ரவிசங்கர சிவாச்சாரியார் அவர்கள் எமக்கு அறிவித்திருக்கிறார். இது வாசகர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியல்லவா?

மேலும் நேயர் கடிதத்தில் ஓர் அன்பர் குறிப்பிட்ட கருத்திற்கிணங்க இப்போட்டி இன்னும் இலகுபடுத்தப்பட்டு நடத்தப்படுவதுடன் சகல தரப்பைச் சேர்ந்தவர்களும், *முக்கியமாக மாணவர்கள் பங்குபற்றக்கூடிய சில போட்டிகளையும் நடத்தவுள்ளோம். பாடசாலை உயர்தர மாணவர்கள் நேரடியாகக் கலந்துகொள்ளத்தக்க வகையில் வினாடிவினாப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.*

எல்லாப் போட்டிகளும் அடுத்த இதழில் அறிவிக்கப்படும்.

## இல 2 முடிவுகள்

1. உமையம்மையின் உடல் அழுக்கிலிருந்து தோன்றியவர் என்ற பொருள் உடைய நாமம் - உமாங்கமலஜாய நம:

2. நவக்கிரகம் ஒன்று சேரும் சந்தர்ப்பம் ஒருபோதும் வராது. ஏனெனில் ராகுவும் கேதுவும் எப்போதும் ஒரே நேர்கோட்டில் எதிரெதிராக 180 பாகையில்தான் - ஒன்றுக்கொன்று ஏழாம் ராசிகளில்தான் நிற்பார்கள்.

3. சிவபிரானைச் சங்கீதத்துடன் தொடர்புபடுத்தும் மூர்த்தம் வீணாதர தட்சிணாமூர்த்தி. (நடராசர் என்பதும் சரி)

4. செய்யத்தொடங்கும் நற்காரியம் இடையூறின்றி நிகழவேண்டுமென்பதற்காக அக்காரியத்தின் ஆரம்பத்தில் செயவதே யாத்ரா தானம்.

5. பிரளய காலத்தில் உலகம் அழிந்தபின் மீண்டும் சிருஷ்டிக்கப்படும்போது இறைவன் இறைவியர் பெயர் - ஆனந்த பைரவர், ஆனந்தபைரவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ॐ

𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯 𑌪𑍀𑌠𑌂 सर्वानन्दमय पीठम्

# சர்வானந்தமய பீடம்

## SARVANANDAMAYA PEEDAM

அறிவுத்தேன் பருகி, அயலவர்க்கு அன்புத்தேன் வழங்கி,
அகிலத்தில் அனைவருடனும் பண்போடு பழகுதலையே
மதமாகக் கொண்டு ஆன்மீக வாழ்வு வாழும் அறிவுத்தேட்டம்
மிக்க மனிதர்களின் தொடர்பாடல் மையமே,

***சர்வானந்தமய பீடம்.***

அதற்குத் துணை செய்யும் தொடர்பாடல் சாதனமே

***விவித வித்யா.***

**பேரறிஞர்கள் உங்கள் அறிவை யாவருடனும் பகிர்ந்துகொள்ள**
**விவித வித்யாவைப் பயன்படுத்துங்கள்.**
**அறிவைத் தேடுவோர் உங்கள் ஐயங்களைப் போக்கி**
**அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள விவித வித்யாவைப்**
**பயன்படுத்துங்கள்.**

***அந்தணப் பெரியோர்கள், சமய ஸ்தாபனங்கள்,***
***சமூக நிலையங்கள், நூலகங்கள், கல்விச் சாலைகள்***
***யாவற்றுடனும் விவித வித்யா***
***தனது நெருங்கிய நட்புறவை வளர்த்துத்***
***தேடல் உள்ளவர்களை இணைத்துவைக்கவிருக்கிறது.***

## வாருங்கள் , வந்து பயனடையுங்கள்

**அண்மைக் காலத்தில் வெளிவந்த சம்ஸ்கிருத நூல்களை வாங்க**
**விரும்புவோர் எம்மோடு தொடர்பு கொள்ளலாம்.**

## சம்ஸ்கிருத நூல் வெளியீட்டாளர்களே

**உங்கள் நூல்கள் சரியானமுறையில் நல்லறிஞர்கள் பலரிடம்**
**சென்றடையவேண்டுமென்று விரும்புகிறீர்களா?**
**எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள். வியாபார நோக்கமின்றி**
**விநியோக வேலைகளைச் செய்து உதவுவோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பிய நாடுகளில்
## எமது தொடர்புகளுக்கு.........

ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் அன்பர்கள் பலர் விவித வித்யாவின் ஆதரவாளர்களாகவும் சந்தாதாரர்களாகவும் இருக்கின்றனர். அவர்களுக்கு உரிய காலங்களில் இதழ்கள் கிடைப்பதில்லை என்ற குறை உண்டு. அவர்களுக்கு விவித வித்யாவை அனுப்பிவைப்பதில் எமக்கும் பல சிரமங்கள் உண்டு.

அதுமட்டுமல்லாமல் சர்வானந்தமய பீடத்தின் நூல்வெளியீடுகளையும் ஸ்ரீவிதயா கணினி அச்சகத்தில் அச்சிட்டு வெளியாகின்ற பல நல்ல சம்ஸ்கிருத நூல்களையும் தாங்கள் பெறமுடியவில்லை என்ற ஆதங்கம் இவர்களுக்குண்டு. இக்குறைகளைப் போக்க இரு அன்பர்கள் முன்வந்துள்ளனர்.

லண்டன் மாநகரில் வாழும் ரூபன் அவர்களும் ஜெர்மன் நாட்டில் வாழும் சேகர் அவர்களும் எமது பிரதிநிதிகளாகச் செயற்படுகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் அன்பர்கள் சர்வானந்தமய பீடத்தின் சேவைகளைப் பெறுவதற்கும் நூல்வெளியீடுகளைப் பெறுவதற்கும் இலகுவாக இவர்களுடன் தொடர்புகொள்ளலாம்.


1. S. SIVASEKARA SARMA
18, JUKEN HOHLWEG
24939 SLENSBURG
GERMENY. ☎ 0049 461 5205300
Mob. 0049 174 3344428
Fax 0049 461 5205298
sekarann@hotmail.com

2. E. VETHARUBA KURUKKAL
45, NORTON ROAD
WEMBLEY
MIDDLE SEX
HAO 4RG U.K. ☎ 02089027800
07904789919
vetharuban@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org